Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

INTERNET BROWSING

உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் (Global Informatics) நிறுவனத்தின் மிகக் குறைந்த கட்டணத்தில் 1 hour - 50/= உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

gi@netcafe

Internet Brosing Center

Global Informatics (pte) Ltd.
379, Kasthuriyar Road, Jaffna.
Tel: 077 7364247, 021 222 5735 - 6

(சி-1172)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 6 (07.07.2003) திங்கட்கிழமை இதழ் : 278

## ஆயுதங்களை கைவிட கோருகிறது ஜே.வி.பி.

ஜனநாயகத்தில் புலிகளுக்கு நம்பிக்கை இருந்தால், அவர்கள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என, ஜே.வி.பி எம்.பியான, அனுரா திசநாயக்க கேட்டுள்ளார்.

அமைச்சர் சந்திரசேகரன், விரைவில் அரசியலிலிருந்து மலையக மக்களால் விரட்டப்படுவார். ஆறுமுகம் தொண்டமான் விரைவில் ஜே.வி.பியுடன் இணைவார் எனவும் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி., தமிழர்களுக்கான உரிமைகளை எதிர்க்கவில்லை. தமிழீழ உருவாக்கத்தையே எதிர்க்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆனந்தசங்கரியின் தலைமை குறித்து கூட்டணியின் கூட்டத்தில் பேசவில்லை!

## கட்சி வட்டாரங்களில் தெரிவிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக ஆனந்தசங்கரி தொடர்ந்தும் பதவியிலிருப்பாரா என்பது தொடர்பாகத் தற்போது எழுந்துள்ள சர்ச்சை குறித்து, நேற்று நடைபெற்ற கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டத்தில் பேசப்படவில்லை என, கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருக்கும் ஆனந்தசங்கரி, தலைமைப் பதவியிலிருந்து விலகவேண்டும் என, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் கிளைக்குழு உறுப்பினர்கள் பலர் கோரியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக, நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், பேசப்படும் என்றும், ஆனந்தசங்கரியை தலைமைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



சங்கரியார் சமாளிச்சுப் போட்டாரோ...!

# உயர்பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய ஆபிரிக்க படையதிகாரிகள் வருகின்றனர்!

## இராணுவ உயர்மட்ட மாநாட்டிலும் பங்கேற்பர்

(யாழ்ப்பாணம்)


**யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து நேரடியாக ஆராய்ந்து, தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள, தென்னாபிரிக்கா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளின் ஓய்வுபெற்ற படையதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இவர்கள் கலந்துகொள்ளும் உயர்மட்ட மாநாட்டில், யாழ். படையதிகாரிகளையும் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை மீளாய்வு செய்வது தொடர்பான விசேட மாநாடு ஒன்றில் இவர்கள் கலந்துகொள்வர்.

சர்வதேச ரீதியில் - படையினரால், பல்வேறு நாடுகளில், அமுல்செய்யப்பட்டுவந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும், அவற்றினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றை, யாழ். குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகளுடன் ஒப்பிட்டும், அனுபவபூர்வமாகவும், இந்த விசேட மாநாட்டில் கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படவுள்ளன.

நாளைமறுதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இந்த விசேட மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, தென்னாபிரிக்காவில் இருந்தும், (10 ஆம் பக்கம் பார்க்க)

# 27 ஆண்டுகளுக்குப் பின்னர் திருக்கேதீஸ்வர கும்பாபிஷேகம்!



மன்னார் - திருக்கேதீஸ்வரத்தில், 27 ஆண்டுகளுக்குப் பின்னர், மாபெரும் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் உரிமைக்கு ஆதரவாக சிங்களவர் மனநிலை மாற்றம்!



## வாசுதேவ நாணயக்கார உரை

(யாழ்ப்பாணம்)

'வடக்கு - கிழக்குப் பகுதிகளில், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கும், புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் - இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்று அவசியமானது' என, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற, புதிய ஜனநாயகக் கட்சியின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுவிழாவில் சிறப்புரை நிகழ்த்தும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுஜன ஐக்கிய முன்னணியும், (10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று திருமலைக்குப் பயணம்!

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன், இன்று திருமலைக்கு விஜயம் செய்யவுள்ளார். நாளை இவர் வன்னிக்கும் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

திருமலை - கிண்ணியாவில், குரங்குப்பாஞ்சான் காட்டுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுவது தொடர்பாக ஜெனரல் ரெலவ்சன், புலிகளின் பிரதிநிதிகளு (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெஸ்போர்க் நாளை வன்னிக்கு!

நோர்வே விசேட தூதுவர் ஜோன் வெஸ் போர்க், நாளை வன்னிக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக - இவர் நாளை மறுதினம் வன்னி வருவதாகவும், அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக வரைபு ஒன்றைத் தம்முடன் எடுத்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்திட்டம்; சந்திரிகாவிடம் தமிழ்க்குழுக்களால் சமர்ப்பிப்பு!

விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படுத்தப்பட வேண்டிய புதிய செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஜனாதிபதி.சந்திரிகா குமாரதுங்கவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கையளிக்கப்படவிருக்கிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதர் அணி உட்பட, மேலும் சில தமிழ்க் கட்சிகள் இணைந்து, இந்தச் செயற்திட்டத்தைத் தயாரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுவதன் மூலமாக, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தையின் கத்திக்குத்துக்கு மகன் ஸ்தலத்தில் பலி!

தந்தையின் கத்திக்குத்துக்கு இலக்கான மகன், ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமான கொடூரச் சம்பவம் நேற்று நண்பகல் மீசாலை மேற்குப் பகுதியில் இடம்பெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த லோகேந்திரன் துசிகாந்தன் (வயது 18) என்பவரே பலியானவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -975)




புதிய ஜனநாயகக் கட்சியில் 25 ஆவது ஆண்டு விழாவில் - கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதை முதற்படத்திலும், கௌரவிக்கப்பட்ட மூத்த உறுப்பினர்களை இரண்டாவது படத்திலும், ஆண்டுவிழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். படங்கள் - லிவிங்ஸ்டன்

# யாழ்ப்பாண நகரில் நேற்று நடைபெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா நேற்று, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர்கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில், நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில், கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் க.தணிகாசலம் வரவேற்புரையினை நிகழ்த்த, கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா உரை நிகழ்த்தினார்.

பின்னர் புதிய ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 'இன்னோர் உலகிற்காய் எழுவோம்' என்ற தலைப்பில் தணிகையன் தலைமையில், கவியரங்கு இடம்பெற்றது.

மதிய இடைவேளையைத் தொடர்ந்து, ஆண்டுவிழாச் சிறப்புரைகள் இடம்பெற்றன. இதில், புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார உட்பட பலர் உரையாற்றினர். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (லி)

# போட்டிகளில் வென்றோருக்கு நெல்லியடியில் பரிசு வழங்கல்!

(நவிண்டில்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு, கலிகை துன்னாலை இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற, கரும்புலிகள் நாள் நிகழ்வில், பரிசில்கள் வழங்கப்பட்டன.

போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விபரங்கள் வருமாறு -

சைக்கிள் ஓட்டப்போட்டி, முதலாமிடம் - க.யோகேஸ்வரன், இரண்டாமிடம் - தி.கமல்ராஜ், மூன்றாமிடம்- க.புவனேந்திரன்.

மரதன் ஓட்டப்போட்டி, முதலாமிடம் - ந.காந்தரூபன், இரண்டாமிடம் - ஆ.புஸ்பராசா, மூன்றாமிடம்- சி.மோகன்தாஸ் ஆகியோரும்,

கிறீஸ் கம்பம் ஏறுதலில் கு.ஜெயவர்ணனும், கயிறிழுத்தல் போட்டியில் கலிகை காந்தன் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளது.

இவர்களுக்கான பரிசில்களை கரும்புலிகளின் பெற்றோர்கள் வழங்கிக் கௌரவித்தனர். (116)

# அத்தாய் கிராமத்தில் சுழற்சி முறைக் கடன்!

நியாப் திட்டத்தின்கீழ், அத்தாய் கிராம அலுவலர் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட ஒன்பது இலட்சம் ரூபா நிதி - ஜீவனோபாய ஆதாரக் கடன் திட்டத்தின் கீழ், சுழற்சி முறைக்கடனாக வழங்கப்படவுள்ளது.

இதற்கான, பட்டியல் அத்தாய் சனசமூக நிலையத்தினால் தயாரிக்கப்பட்டு, நியாப்திட்ட தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. மேற்படி கடன்திட்டம் அத்தாய் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (116)

## பரமானந்தா ஆச்சிரமத்திற்கு பஸ் வண்டி

வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்திற்கென 49 ஆசனங்களைக் கொண்ட பஸ்வண்டியொன்றைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கான ஏற்பாடுகளை, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (116)

## அதிபர்களுக்கான கூட்டம்

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் - இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருப்பதால், அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (127)


## தமிழீழ மாணவர் அமைப்பின் ஆசிரியர் பணிநிலைக்கான விண்ணப்பம்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் பணியாற்றுவதற்கு பின்வரும் பாடங்களுக்கு தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*பாடங்கள்:* கணிதம்
விஞ்ஞானம்
ஆங்கிலம்
நடனம்

*தகைமை:* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி.

*ஊதியம்* : ஆசிரியர் சேவை 3 I இற்கானது (ரூபா ஏழாயிரத்திற்கு மேல்)

*விண்ணப்ப முடிவு திகதி* : 10.07.2003

*நேர்முகத் தேர்வு* : 13.07.2003 மு.ப.10.00மணி

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரியும் நேர்முகத் தேர்வுக்கு தோற்றும் இடமும்:- **தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவை**
வலயக் கல்வி பணிமனை வளாகம்,
யாழ்.கல்வி வலயம்,
யாழ்ப்பாணம்.

(சி-1173) - தமிழீழ மாணவர் அமைப்பு.



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த

**மிலிட்டரி**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE BOUN IDENTITY

(சி-1138)



**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

**பாறை**



தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு இரவு 9.00

நாளை முதல் **தூள்**

(சி-1137)



## குட்டி மேதைகள்

**தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சி விண்ணப்பம்**

முழுப்பெயர் :..............................
..............................

பால் :ஆண் [ ] பெண் [ ]

பிறந்த திகதி :..............................

முகவரி :..............................
..............................

பாடசாலையின் பெயர்:..............................

ஆர்வமுள்ள துறைகள்:....................
....................
....................

....................
கையொப்பம்

குறிப்பு: நமது ஈழநாடு சிறுவர் அரங்க இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள் நேடியாக இந்த நிகழ்ச்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். எனவே, கழக அங்கத்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

விண்ணப்ப முடிவு திகதி : 2003.07.09

அனுப்ப வேண்டிய முகவரி: Digital Network,
231, கோவில் வீதி,
நல்லூர்.

**ஊடக அனுசரணை:** நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



## மாபெரும் புத்தகம் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

**புத்தகம்** **புத்தகம்**

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள புத்தகக் கடல். 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள். ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரங்களும் ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம்.

இவைதவிர எம்மிடம் பாடசாலை, அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழி பொருட்கள், மூலப் பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைக்களுக்கு இலவச விநியோகசேவை. உங்கள் தேவை எதுவானாலும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

(சி-1148) 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2225542





புலிகளின் பாசறை ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில், ஈகைச்சுடர் ஏற்றிய பின்னர், தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அகவணக்கம் செலுத்துவதை முதற்படத்திலும் , 'கரும்புலிகள் - பாகம் 6' முதலாவது ஒலிப்பேழையை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை - தேசியத்தலைவர் வே. பிரபாகரனுக்கு வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# முஸ்லிம்களுடனான உறவை சீர்குலைப்பதற்கு சதி முயற்சி!

## பொத்துவில் அரசியற்பொறுப்பாளர் தெரிவிப்பு

விறகு எடுக்கச்சென்ற பொத்துவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 15 மாட்டுவண்டிகள்- காட்டுப்பகுதியில் வைத்து இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்களால் வழிமறித்துத் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம், சமாதானத்தை விரும்பாத சக்திகள் எம்மீது வேண்டுமென்றே பழியைச் சுமத்த மேற்கொள்ளும் சதியென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கோமாரிப்பற்று-பொத்துவில் அரசியற்றுறைப் பொறுப்பாளர் யோகநம்பி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அப்பகுதி விடுதலைப் புலிகளின் வனவள பாதுகாப்புத்துறைப் பொறுப்பாளர் இந்திரன் கருத்து தெரிவிக்கையில் -

இவ்வாறான செயல்களைச் செய்து, முஸ்லிம் ஏழைகளின் பொருளாதாரத்தை நஷ்டமடைய வைக்க, எமது தலைமை - எம்மைப் பணிக்கவில்லை. எமக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வளர்ந்துவரும் உறவினைச் சிதைக்கவும், எம்மைக் குற்றவாளிகளாகச் சித்தரிக்க வைக்கவுமே இவ்வாறு சதிமுயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிவித்தார்.

# புரிந்துணர்வு உடன்பாட்டை மாற்றியமைப்பது அவசியம்!

## சுதந்திரக்கட்சிச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில், பல குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, புரிந்துணர்வு உடன்படிக்கை திருத்தி அமைக்கப் பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற, இந்தச் செய்தியாளர் மாநாட்டில் - பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வாவும் கலந்து கொண்டார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து உரையாற்றுகையில் -

நோர்வே அரசாங்கம் அனுசரணையாளர் என்ற தரத்திலிருந்து, தன்னைத் தீர்ப்புக் கூறும் நிலைக்கு உயர்த்திக் கொண்டுள்ளது. நோர்வே அரசுக்குக் கொடுக்கப்பட்ட கடமையை மாத்திரம் செய்தால் நாம் திருப்தி கொள்வோம்.

இனப்பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வு காணப்படவேண்டும் என்பதே சிறிலங்கா. சுதந்திரக்கட்சியின் கொள்கையாகும். சுதந்திரக்கட்சியின் கொள்கை "நம் நாடு" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பான திருத்தங்களைச் செய்வதற்குப் பொதுமக்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்களிடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில், பொது இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி பேச்சுக்களில் இருந்து நிமால் சிறிபால டி சில்வா நீக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் நிமால் சிறிபால டி சில்வாவும் கலந்துகொள்வார்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இடைக்கால நிர்வாகசபை ஒன்றைப் பிரதமரால் வழங்கமுடியாது. அத்துடன், எந்த அடிப்படையிலான இடைக்கால நிர்வாகசபையை வழங்கப் போகிறது என்று, திட்டவட்டமாக இன்னும் அறிவிக்கவில்லை. அரசாங்கம் தனது யோசனையை வெளியிட்டதும் இது குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது கருத்துக்களை வெளியிடும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஒரு சில நடவடிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. புரிந்துணர்வு உடன்பாட்டிலுள்ள குறைபாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க - பிரதமரிடம் பலமுறை எடுத்துக் கூறினார்.

அதனைத் திருத்திக்கொள்ளுமாறு பலமுறை ஆலோசனை கூறியும், பிரதமர் அது பற்றிக் கவனத்தில் கொள்ளவில்லை. சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம், என்று மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

### கோபுரத்திலிருந்து வீழ்ந்து மூவர் காயம்

நேற்றுமுன்தினம் யாழ்.பெருமாள் கோவில் கோபுரத்தில் வேலை செய்து கொண்டிருந்த மூன்று இளைஞர்கள்- 85 அடி உயரத்திலிருந்து கீழே வீழ்ந்ததில் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 11.50 மணியளவில் இவர்கள் கோபுரத் திருத்த வேலை செய்வதற்கு, சுற்றிக்கட்டப்பட்ட தடிகள் மூலம் மேலே ஏறிச் சென்றுகொண்டிருந்த போது, திடீரென தடி முறிந்து மூவரும் கீழே கூரையில் வீழ்ந்தனர்.

கொக்குவிலைச் சேர்ந்த தம்பிராசா குமார் (வயது 22), எதிர்மன்னசிங்கம் செந்தில்ராஜ் (வயது 20), இலங்கநாதன் பரமேஸ்வரன்(வயது 21) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (121)

## திருமலை- சேனையூரில்

# கரும்புலிகள் நினைவுக்கல்லை கேணல் பதுமன் திறந்துவைப்பு!

திருகோணமலை மாவட்டத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் மூதூர் கிழக்கு, சம்பூரில் இடம்பெற்றன. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூர்- சேனையூர் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக, நேற்றுக் காலை 10.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பதினாறு கரும்புலிகளினதும், முதலாவது கரும்புலி கப்டன் மில்லர், முதலாவது பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி ஆகியோரினதும் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியும் இந்த நிகழ்வில் திறந்து வைக்கப்பட்டது.

புலிகளின் திருகோணமலை நகர இராணுவத்தளபதி உதயன் தேசியக்கொடியை ஏற்றிவைக்க, திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. கரும்புலிகளின் நினைவுக்கல்லை திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கேணல் பதுமன், திலக் மற்றும் புலிகளின் பிரதேசத் தளபதிகள், போராளிகள், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆகியோர் - வீரச்சாவடைந்த கரும்புலிகளுக்கு மலரஞ்சலி செலுததினர். அத்துடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து, போராளிகளின் பயிற்சி ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது. இந்தப் பயிற்சி ஒத்திகையைப் பெருமளவிலான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

பயிற்சியில் சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளுக்கு, கேணல் பதுமனும, நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கமும் பரிசில்களை வழங்கினர்.





திருமலை - கரும்புலிகள் நாள் நிகழ்வில் புலிகளின் தளபதிகள் அகவணக்கம் செலுத்துவதை முதற்படத்திலும், போராளியொருவருக்கு தளபதி கேணல் பதுமன் பரிசு வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# காணாமற்போனோரைக் கண்டுபிடிக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை!

## பெற்றோர் பாதுகாவலர் சங்கம் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதாகிக் காணாமற் போனோரைக் கண்டுபிடிப்பதற்கு எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

கடந்த 1996 ஆம், 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில காணாமற்போன தமது உறவுகளைத் தேடிக் கண்டுபிடிக்கப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், இதுவரை உரியதரப்பிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்கவில்லை.

இதேவேளை, அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் வெறும் வாக்குறுதியைத் தருவதோடு நின்றுவிடுகின்றனர். எவருமே காணாமற்போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை இதுவரை எடுக்கவில்லை. காணாமற்போன உறவுகள் மீளக்கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் பெற்றோர்கள், உறவினர்கள், சகோதரர்களின் கண்ணீர் வாழ்க்கை தொடர்ந்துகொண்டிருப்பது பற்றி எவரும் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை என்றும், காணாமற்போனோரின் பெற்றோர் - பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சில மாதங்களுக்கு முன்னர் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கப்பிரதிநிதிகள் - பிரதமரின் செயலாளர் மற்றும் அமைச்சர்களுடனும் இது தொடர்பாகப் பேசிய துடன், சிறைச்சாலைகளுக்குச் சென்று தேடிப் பார்த்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# அல்லைப்பிட்டியில் அநாதரவாக கிடந்த இளைஞன் மரணம்!

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியின் வீதியோரத்தில் அநாதரவாகக் கிடந்த இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சில நிமிடங்களில் மரணமானார்.

நேற்றுமுன்தினம் மாலை - அல்லைப்பிட்டி வீதியோரமாகக் கிடந்த இவரை, அவ்வீதியால் வந்த இரு விறகுவெட்டிகள் - ஓட்டோ ஒன்றில் ஏற்றி யாழ்.வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.


எனினும், இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பத்து நிமிடங்களில் மரணமானார். சடலத்திருந்த அடையாள அட்டை மூலம் இவர் சிறீஸ்கந்தராசா சிறீஸ்வரன் (வயது 28), முல்லைவீதி, பரந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.(121)

# தேசிய கல்வியியற்கல்லூரியில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள்!

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் கரும்புலிகள் நினைவுதின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

ஆசிரியர் சூரியகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு நினைவுநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதல் நிகழ்வாக, ஈகச்சுடரைத் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பீடாதிபதி கமலநாதன், உபபீடாதிபதி தனபாலன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன், சர்வதேச மாணவர் பேரவைத்தலைவர் கஜேந்திரன் ஆகியோர் - கரும்புலிகள் நினைவுரைகளை நிகழ்த்தினர். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரா)



ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் பாடசாலைக் கொடியை ஏற்றிவைப்பதையும், அருகில் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசிங்கம், பாடசாலை அதிபர் சிறிகாந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (46)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் :சு.ஸ்ரீ நாககீர்த்தனன்
முகவரி : 7, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------------------

முகவரி :--------------------------------

பிறந்த ஆண்டு:--------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றார் ஒப்பம்


# தென்மராட்சி வலய தமிழ்த்தினப் போட்டி; வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம்!

(மீசாலை)

தென்மராட்சி கல்விவலய மட்ட 2003 ஆம் ஆண்டு தமிழ்மொழித் தினப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர் விபரம் வருமாறு -

### வாசிப்பு

**பிரிவு 1**

நி.சோபிதா (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), ச.றஜீதா (மசாலை வீரசிங்கம் ம.வி.), பா.நேமினி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**பிரிவு 2**

வி.கோபிநாத் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), பா.நிலாஜினி (மீசாலை வீரசிங்கம் ம.வி), சி.மேனகா (கரம்பை குறிச்சி அ.த.க. பாடசாலை).

### கதை கூறல்

பிரிவு 1

சா.நிசான் (சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலை), ச.சர்மிலன் (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), தே.கபீசன் (கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்).

### ஆக்கம் - எழுத்து

பிரிவு 1

ம.ஹேதாரணி (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), அ.அமுதினி (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), ம.நிவேதிகா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை).

### கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்

பிரிவு 2

க.மயூரி (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), வே.பிரியா (மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சி.தீபிகா (கைதடி நாவறகுழி அ.த.க. பாடசாலை).

### கடிதம் எழுதுதல்

**பிரிவு 3**

சி.சுயனகா (நாவற்குழி ம.வி), ப.சர்வசொரூபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ப.மதுவந்தி (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

### கட்டுரை, சுருக்கம் எழுதுதல், கவிதை நயத்தல்

**பிரிவு 4**

த.பிரன்சியா (உசன் இராமநாதன ம.வி.), சி.கருணதீபா (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), சி.சத்தியானந்தன் (கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை), சி.சிந்துஜா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

### கட்டுரை திறனாய்வு, இலக்கிய சொற்பொழிவு, வினாவிடை

**பிரிவு 5**

த.மிதுனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), உ.புவிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு), ந.திருவாணி (வரணி ம.வி.).

### குறுநாடக ஆக்கம்

பு.நவநீதா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ப.புஸ்பரஞ்சினி (வரணி ம.வி.), கு.நவநீதன் (கச்சாய் அ.த.க. பாடசாலை).

### கவிதை ஆக்கம்

**பிரிவு 4**

இ.சௌமியா (மீசாலை விக்கினேஸ்வரா ம.வி), த.மௌலிகா (நாவற்குழி ம.வி.), ந.ஜெயசக்தி (விடதத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்)

**பிரிவு 5**

ப.சைந்தவி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.அனுஷா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), ஸ்ரீ.கார்த்திகா (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.).

### சிறுகதை ஆக்கம்

**பிரிவு 4**

இ.மயூரி (வரணி ம.வி), ப.ஜனனி (மீசாலை வீரசிங்கம் ம.வி), ச.சசிகலா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**பிரிவு 5**

சோ.ரேவதி (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.), த.வனிதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சி.சதீசன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

### பேச்சு

**பிரிவு 1**

க.அபிராமி (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), சி.சிந்துஜா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயம்), சி.லக்ஷியா (மீசாலை வீரசிங்கம் ம.வி)

**பிரிவு 2**

சி.யசோதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),அ.கோகுலன் (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்), எஸ். நிஷாந்தி (சாவகச்சேரி டிறிபேக்), கு.தேனமலர் (மீசாலை விக்னேஸ்வரா ம.வி.).

**பிரிவு 3**

க.மிருந்தூமியா (விடத்தற்பளை கமலாசினி), த.பிரதீபன் (சாவகச்சோ டிறிபேக்), மு.சத்தியப்பிரியா (இடைக குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்).

**பிரிவு 4**

பா.கயலக்சுமி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), அ.றெஜீனா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), வே.அர்ச்சனா (சாவகசசேரி மகளிர் கல்லூரி).

**பிரிவு 5**

சி.பரதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா.உதயசாந்தி (உசன் இராமநாதன் ம.வி.), பா.வனஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

### பாவோதல்

**பிரிவு 1**

த.அபிநயா (சாவகச்சேரி இந்து ஆ.பாடசாலை), த.துஜீவா (அல்லாரை அ.த.க.பாடசாலை), செ.கஜானனன் (உசன் இராமநாதன் ம.வி.).

**பிரிவு 2**

செ.வினுஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு.பிரியங்கா (வரணி ம.வி), க.கவிப்பிரியா (கொடிகாமம் அ.த.க.பாடசாலை), க.கனீந்தினி (அல்லாரை அ.த.க.பாடசாலை).

**பிரிவு 3**

சி.லலிதாரூபி (வரணி ம.வி.), க.பிருந்தா (விடத்தற்பளை கமலாசினி ம.வி.), சி.கஸ்தூரி (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**பிரிவு 4**

பொ.றினோசா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கௌரி (கச்சாய் அ.த.க.பாடசாலை), ந.சுதாஜினி (விடத்தற்பளை கமலாசினி).

**பிரிவு 5**

நா.பாமினி (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ச.றஜீவா (வரணி ம.வி.).

### இசையும் அசைவும்

**பிரிவு 1**

சி.அனுஷா (கச்சாய் அ.த.க.பாடசாலை), வோ.மயூரதி (சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), சி.சுரேகா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை).

### இசை (தனி)

**பிரிவு 2**

ப.கஜீபா (மீசாலை விக்னேஸ்வரா ம.வி.), க.துவாரகன் (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்ர. வித்தியாலயம்), க.நிமாலினி (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.)

**பிரிவு 3**

ஸ்ரீ.விதுசன் (கைதடி முத்துக்குமாரசாமி), செ.மெரிஸ்நெலர் (சாவகசசேரி மகளிர் கல்லூரி), கே.விஷ்ணுகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

**பிரிவு 4**

தி.சங்கீதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மோ.அபிராமி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.தனுஷா (கொடிகாமம் அ.த.க.பாடசாலை).

**பிரிவு 5**

செ.பாமிலா (வரணி ம.வி.).

### இசைகுழு

**பிரிவு 1**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக், சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**பிரிவு 2**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக், சாவகச்சேரி மகளிர்

### நடனம் (தனி)

**பிரிவு 1**

பி.தமயந்தி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ந.கவிப்பிரியா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), இபிரசாலினி (கைதடி முத்துக்குமாரசாமி).

**பிரிவு 2**

க.இந்திக்கா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.ஆர்த்திகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), து.துஷ்யந்தி (கைதடி குருசாமி வித்தியாலயம்).

**பிரிவு 3**

க.குலசினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.நிரஞ்சி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ச.சிறோமி (நாவற்குழி ம.வி.).

**பிரிவு 4**

சு.ஜான்சி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.கல்பனா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.).

**பிரிவு 5**

க.ஜனனி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

### நடனம்(குழு)

**பிரிவு 1**

சாவ.மகளிர் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி.

**பிரிவு 2**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### வில்லுப்பாட்டு

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

### விவாதம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி ம.வி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

### தமிழறிவு - வினாவிடை

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி., சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

### விசேட இசைக்கருவி போட்டி

ஞா.தர்சியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மெருகூட்டப்படும் வைத்தியசாலை விடுதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகள் மெருகூட்டப்பட்டு வருகின்றன.

வைத்தியாசாலையின் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் இலக்க விடுதிகளே வர்ணப்பூச்சுக்கள் பூசப்பட்டு, பளிங்குக்கற்கள் பதிக்கப்பட்டு வருகின்றன. இதனால், வைத்தியசாலை நோயாளர் விடுதிகள் தற்போது புதுப்பொலிவுபெற்றுக் காணப்படுகின்றன.

## மாலிசந்தி பிள்ளையார் உற்சவம்

(அல்வாய்)

அல்வாய் மாலிசந்தி ஸ்ரீவரதராஜப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

## ஈழவேந்தன் உரை

(யாழ்ப்பாணம்)

"ஈழத்தமிழருக்கு எதிர்காலம் உண்டா" என்ற தலைப்பில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் மா.க.ஈழவேந்தன் உரை நிகழ்த்துவார்.

## சனசமூகநிலைய ஆண்டு விழாவுக்கு அழைப்பு

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

84 ஆவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் மேற்படி சனசமூக நிலையம், அதன் முன்னோடி நிகழ்வாக - பேச்சு, பொதுஅறிவு, சங்கீதம் ஆகிய கலைப்போட்டிகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடகம் நடத்தவுள்ளது.

மேற்படி சனசமூகநிலையத்தில் கடந்த மூன்று வருடங்களாக இராணுவத்தினர் நிலைகொண்டிருந்ததால், அது இயங்கமுடியாதிருந்தது குறிப்பிடத்தக்கது. (55)

# மறுவிசாரணை

## இலக்கியச்சோலை

'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி.' அதேபோல, தான் உண்டு, தன் வேலையுண்டு என்றிருந்தவனை, அம்மாவின் கடிதம் உசுப்பிவிட்டு, தற்போது 'உணவு செல்லவில்லை சகியே, உறக்கம் கொள்ளவில்லை' என்றநிலை.

நந்தகுமாரன் - செல்லமாக நந்தன். ஜேர்மனிக்கு வந்து பத்து வருடங்கள் இருக்குமா? இருக்கும். வசதியாக உள்ளானா? உள்ளான்.

அன்று அம்மாவின் கடிதம் வந்திருந்தது.

'அன்புள்ள நந்தன்!' என்று ஆரம்பித்து, ஊர்ப் புதினங்கள் கொழும்புப் புதினங்கள் எனச் சுற்றிச் சுழன்று விசயத்துக்கு வந்தாள்.

'இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்பிடியே வாழப்போறாய்? உனக்கும் முப்பது வயதாகுது. காலா காலத்திலை ஒரு நல்ல இடமாய்ப் பார்த்து, கலியாணம் கட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது. பிறக்கறாசியார் பொன்னம்பலம் தன்னுடைய இரண்டாவது மகளுக்கு உன்னைக் கேட்டுவந்தவர். அவையும் வெள்ளவத்தையில்தான் இருக்கினம். உனக்குச் சம்மதம் என்றால் மேற்கொண்டு கதைக்கலாம்...'

கடிதம் வந்த விசயத்தைச் சொல்லி, சில வேண்டுகோள்களை விடுத்துப் பதிலை எதிர்பார்த்து, அன்பைத் தெரிவித்து முடிந்தது.

'பிறக்கறாசியார் பொன்னம்பலத்தின்ரை மகள்....?'

நினைத்துப் பார்த்தான்.

மனத்திரையில் பத்து வருடங்களுக்கு முந்திய காட்சிகள் பசுமையாகப் படம் விரித்தன.

சந்தியில் இருக்கும் தபாற்கந்தோர். அதற்குப் பக்கத்திலுள்ள மதவடிக் கல் வீடு. அதில் இரண்டு பெண்பிள்ளைகள். அதில் ஒன்றாக இருக்குமா? அட... அதுகள் 'கிளாக்கர்' நாகலிங்கத்தாற்றை மகள்மார்.

அந்தப் பள்ளிக்கூடம், அதன் பின்பக்கத்து முள்ளு வேலியாலை தெரியும் வீட்டிலை ஒருத்தி. சைக்கிள்கூட வைத்திருந்தாள். கிப்பித்தலை. அவளாக இருக்குமா?

அட... அது 'ஜேபி'யின்ரை மகள்.

பிறக்கறாசியார் பொன்னம்பலமே நினைவில்வர மறுத்தபோது, மகளை எப்படி நினைத்துப் பார்க்கமுடியும்.

அம்மாமீது ஆத்திரமாக வந்தது.

கடிதத்தோடு ஒரு போட்டோவாவது கேட்டு வாங்கி அனுப்பியிருக்கலாம்.

கலியாணம்தானே... இவ்வளவு காலத்துக்குப் பிறகு, அம்மாவுக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறது. சம்மதம் தெரிவித்து விடலாமா?

பெண் எப்படி இருப்பாள் என்று தெரியாமல், எவ்வாறு சம்மதம் தெரிவிப்பது?

கிளியை எதிர்பார்த்துக் கற்பனைகளில் காதல் சாம்ராஜ்யம் அமைத்து, கனவு கண்டுகொண்டிருக்கும் போது, மைனா வந்து குதித்துச் சாம்ராஜ்யத்தைச் சிதறடித்துவிட்டால்.... வாழ்க்கையே நரகமாகிவிடும்.

'போட்டோ அனுப்பினால்தான் முடிவு கூறலாம்' என அம்மாவுக்கு அறிவித்தால் என்ன? தவறாக நினைத்து விடுவாள். தனது பிள்ளை தன்னிலை நம்பிக்கை இல்லாமல் போட்டோ கேட்கிறானே என்று வருத்தப்படுவாள்.

பெண் எப்படி இருப்பாள் என்று தெரியாமல் பதில் எழுத மனம் ஒப்பவில்லை.

அம்மாவுக்குத் தீரவிசாரித்துப் பெண்ணைப்பற்றி அறிந்ததன் பின்னர், பதில் போட்டால் என்ன? தாமதமானால், வலிய வந்த சம்பந்தம் தூரவிலகிப் போய்விடும்.

பிறகு, பதில் 'லேற்'- அதனால் சம்பந்தம் 'லொஸ்ற்'- வாழ்க்கையே 'வேஸ்ற்'- அம்மா சொல்லுவாள், நீ எதிலையுமே 'லாஸ்ற்'.

நந்தனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. என்னவாவது செய்தாக வேண்டும். அதுவும் மிகவிரைவாக.

யாராவது ஊர் ஆட்களைத் தேடிப் பிடித்தால்தான், விசாரிக்கலாம்.

ஜேர்மனியில் வாழும் ஊராரைப் பட்டியல் போட்டான். மிகவும் தூரத்தில் வசிப்பவர்களைத் தள்ளிவிட்டான். அவசரம் என்றால் பிறகு தேடிப்பிடிக்கலாம்.

வசந்தி அக்கா.... நூறு கிலோமீற்றர் தூரத்தில்தான் வசிப்பிடம். குடும்பமாக வாழ்கிறார். விசாரிக்கலாம்.

வசந்தி அக்காவுக்கு எத்தனை பிள்ளைகளோ தெரியவில்லை.

போகும்போது வெறுங்கையுடனா போவது?

வரிசையான வீதியெங்கும் உயர்ந்து



கம்பீரமாக நிற்கும் அடுக்குமாடி வீடுகள். அவற்றுள் ஒன்றின் வாசலில்போய், வீட்டிலக்கத்தைச் சரிபார்த்துக்கொண்டு, வசந்தியின் பெயர் பொறித்த அழைப்பு மணியைத் தேடினான்.

'கணேசன்'-

வசந்தியின் கணவன்.

அழுத்தினான்.

சிறிது மௌனத்தின் பின் சுவரில் பதிந்திருந்த சிறிய ஒலிபெருக்கியில் வசந்தி அக்காதான்....

'ஹலோ! ஆரது...'

'நான் நந்தன்....'

'நந்தனோ...? எனக்குத் தெரியேலை...'

'என்ன அக்கா உப்பிடிச் சொல்லுறியள்? நான் சின்னையா வாத்தியாற்றை மகன்...'

'ஓ.... ஓ.... தெரியும், தெரியும். என்ன திடீரெண்டு இந்தப் பக்கம்...'

'உதை றோட்டிலை நிக்கவைச்சே விசாரிக்கிறது? கதவைத் திறவுங்கோவன்...'

பிரயாணக் களைப்பு. அவசரத்தில் தேநீரைமட்டும் பருகிவிட்டு வெளிக்கிட்டது. வசந்தியின் வீட்டில் சாப்பிடலாம்தானே என்ற எண்ணம்.

வீட்டிற்கு வரும் விருந்தினர்களை... அதுவும் பல வருடங்கள் கழித்து வரும் விருந்தினர்களை, விழுந்து விழுந்து உபசரிப்பார்கள் என்ற திடமான நம்பிக்கை அவனுக்கு.

சிறிதுநேரம் வசந்தியின் குரலைக் காணவில்லை.

'என்ன அக்கா.... என்ன யோசினை....?'

'யோசினை இல்லை நந்தன். பயம்...'

'பயமோ...?'

ஆச்சரியத்துடன் கூவினான்.

'எனக்கோ...'

'அவருக்குப் பயம்.... நீர் ரெலிபோன் எடுத்துக்கூடச் சொல்லாமை வந்திட்டீர்....'

'உங்கடை ரெலிபோன் நம்பர் என்னட்டை இல்லை அக்கா...'

'குறை நினையாதையும்.... அவர் இல்லாத நேரத்திலை ஆரையும் வீட்டுக்குள்ளை விடக்கூடாதெண்டு உத்தரவு.... அதுதான் நந்தன். நீர் என்ன நினைப்பீரோ தெரியாது...'

வசந்தியின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

நாகரிகத்தின் உச்சியில் நிற்கும் ஒரு நாட்டில் இப்படியொரு கணவன். அவருக்கு இப்படியொரு மனைவி, கூண்டுக்கிளியாக...!!

நாடு மாறினாலும், பாஷை மாறினாலும், உடைகள் மாறினாலும் - உள்ளத்தை மாற்றவிரும்பாத மனிதர்கள்.

'அக்கா! அப்ப நான் போவிட்டு வாறன்...'

'கொஞ்சம் பொறும் நந்தன்.... வீட்டுக்குள்ளைதான் கூப்பிட முடியேலை. என்ன விசயமாய் வந்தனீரெண்டு கேக்கலாமில்லையா?'

'நாலு சுவர்களுள் அடைபட்டுக்கிடக்கும் இவளிடம் சொல்லுவதால், என்னபயன் கிடைத்துவிடப் போகிறது?'

யோசித்தான்.

'விருப்பமில்லாட்டால் வேண்டாம்....'

'இல்லை அக்கா... விசயத்தைச் சொல்லி விசாரிக்கத்தானே விடியவெள்ளண்ண எழும்பி, இவ்வளவு தூரம் வந்திருக்கிறன்.... ஆனால் இப்பிடி வாசலிலை நிண்டு கதைக்கிறது புதுஅனுபவம்...'

'எனக்கு இது பழகிப்போன விதி.... அப்பா, அம்மா பெரிசில்லை, காதலன்தான் வேணுமெண்டு, நானே என்ரை வாழ்க்கையை அமைச்சுக்கொண்டன். இப்ப பாழாய்ப்போன சந்தேகம்.... அதுக்குப் பயந்து பயந்து வாழவேண்டிக் கிடக்கு....'

'கவலைப்படாதேங்கோ.... காலம் எப்பவும் கஷ்டமாக இருக்காது. அக்கா, எனக்கொரு சம்பந்தம் ஊரிலையிருந்து பேசிவந்தது. பிறக்கறாசியாற்றை மகளாம்.... அவவைப் பற்றி உங்களிட்டை ஏதாலும் விசாரிக்கலாம் எண்டுதான் வந்தனான்...'

'என்னத்தைப்பற்றி விசாரிக்கப் போறீர்? அழகு... குணம்.... படிப்பு... பண்பு... இல்லாட்டில் பணம், காசு...? நான் சொல்லுறனெண்டு குறை நினைக்காட்டில், ஒண்டு சொல்லுறன்...'

'சொல்லுங்க...'

'உங்கடை தாய் - தேப்பன் உங்களுக்கு நல்லதைத்தான் செய்வினம்.... அவையில சந்தேகப்படாதையுங்கோ... ஒவ்வொரு மனுசருக்கும் ஒவ்வொருகுறை இருக்கு. ஒருத்தருக்குப் படிப்பு இல்லாட்டில், நல்ல குணம் இருக்கும். பணம் இல்லையெண்டால், நல்ல அழகு இருக்கும். வாழ்க்கைக்கு இதுகளெல்லாம் ஓரளவுக்குத்தான் தேவை... விட்டுக்கொடுத்து வாழுற மனம்தான் முக்கியம்... இண்டைக்கு என்ரை வாழ்க்கையைப் பாருங்கோ... காதலிச்சம்.... படிப்பு, 'ரியூசன்' எண்டு தாய் - தேப்பனை ஏமாத்திக் காதலிச்சம்.... ஒருயிர் ஈருடல் எண்டமாதிரி.... ஆனால், எல்லாம் கொஞ்சநாள் கவர்ச்சி.... இப்ப கவர்ச்சி போய், சந்தேகம் வந்து, நான் ஒரு சிறைப்பறவையாய்.... ஓமோம்.... அவருக்கு என்னிலை சந்தேகம்... அடி, உதை... குத்து.... நான் ஆசையாகத் தேடிக்கொண்ட வாழ்க்கை. என்ரை 'பாஸ்போட்' கூட என்னட்டை இல்லை. அவர்தான் கொண்டு திரியுறார்.... ஓடீடுவனாம்...'

சுவரில் பொருத்தியிருந்த ஒலிபெருக்கியில் வசந்தியின் குரல் விம்மியது.

நந்தனுக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை.

'நந்தன்.... விசாரணைகளாலை ஒரு வாழ்க்கையை வளமாக அமைக்க முடியாது. எல்லாத்துக்கும் மனம்தான் முக்கியம். மனம் இருந்தால் - மார்க்கம் தானாய்த் தெரியும்.... இப்பிடிச் சொல்லுறதுக்காகக் கோபிக்கிறீரோ...'

'இல்லை அக்கா.... நான் மெனக்கெட்டு வந்ததுக்கு உங்கடை அறிவுரை மூலம் பலன் கிடைச்சிருக்கு.... நான் போய்விட்டு வாறன் அக்கா....'

ஒருவரின் அனுபவம் மற்றவருக்குப் படிப்பினையாகிறது.

அம்மாவுக்குச் சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதினான். நிச்சயமாக அம்மா சந்தோசப்படுவாள். அவள் சந்தோசமடைந்தால், அதுவே வாழ்வின் களிப்பிற்கு அஸ்திவாரமாகும்.

அம்மாவின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

✱✱✱

'அன்புள்ள நந்தன்,

உனது கடிதம் கிடைத்து மிகவும் சந்தோசம். ஆனால், விதி வேறுவிதமாக அமைந்துவிட்டது.

பெண் வீட்டார் உன்னைப்பற்றி விசாரித்தார்களாம். உனக்கு உந்த நாட்டுப் புத்தகம் இல்லையாம், சொந்த வீடு இல்லையாம், தொழிற்சாலை வேலை இல்லையாம், ஒரு 'கார்' கூடச் சொந்தமாக இல்லையாம்.


அதனால், வேறு இடத்தில் சம்பந்தம் பேசுகிறார்களாம்.......'

கடிதம் தொடர்ந்தது.

'வசந்தி அக்காவைப்போல ஒருத்தியை அவர்கள் சந்திக்கவில்லைப் போலும்.' நந்தனுக்கு உரத்துச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. ✱

## கிழக்கும் மேற்கும்

### மாமன்னன் அரிச்சந்திரன் - இறையன்பன் யோபு




கடவுள் மேல் கொண்ட அன்பால்
கடவுளைப் பழித்துப் பேச -
இடர்பல நேர்ந்த போதும்
பழித்திட மறுத்தோன் பற்றிச்
"கீப்ரு" மொழியில் உள்ள
கதையினைக் கேட்பீர் நன்கு!
தீமைகள் செய்யும் சாத்தான்
கதையையும் கேட்பீர் நன்கு!
"ஊத்ஸ்" என்னும் நாட்டின் கண்ணோ
"யோபு" எனும் நாமம் பூண்டோன்
ஊருல கேத்தும் வண்ணம்
உயர்குண நலன்கள்; மற்றும்
பண்புகள் நேர்மை தர்மம்
இறையன்பு மிக்கோனாகப்
பெண்மக்கள் மூன்று பேரும்
ஆண்மக்கள் ஏழு பேரும்
கொண்டதோர் குடும்பத்தோடும்
மிகப்பெரும் செல்வத்தோடும்
கண்டவர் மதிக்கும் வண்ணம்
மகிழ்வுடன் வாழ்ந்து வந்தான்!
தேவரின் உலகில் ஓர் நாள்
தேவரின் சபையின் கூட்டம்!
தேவரிற் சபையிற் பொல்லாச்
சாத்தானும் இருக்கக் கண்டு
இறைமகன் அவனைப் பார்த்து
"எங்கிருந்து இங்கே வந்தாய்?
உரைத்திடு" என்று கேட்டார்!
"நிலவுலகத்தை விட்டு இன்று
இங்குற்றேன் ஐயா" என்றான்!
"இறைபக்தி மிக்கயோபு
அங்குள்ளான் கண்டதுண்டோ?"
என்றிறை அவனைக் கேட்டார்!
"செல்வங்கள் நலங்கள் யாவும்
அவனுக்குக் கொடுத்து விட்டீர்!
வெல்லரும் அன்பை உன்மேல்
கொண்டுள்ளான் யோபு - ஆனால்
அளித்துள்ள செல்வம் எல்லாம்
பறித்திடின் அவனும் உம்மைப்
பழித்திடத் தயங்கான்" என்று
சினம் மிக உரைத்தான் சாத்தான்!
கடவுள் தன் பக்தன் அன்பைச்
சோதிக்க நினைத்த தோடு -
கடவுள் தன் பக்தன் அன்பை
உலகிற்கு காட்ட எண்ணி
கடவுள் தன் பக்தன் அன்பை
சோதிக்கச் சாத்தானுக்கு
கடவுள் ஓர் வாய்ப்பைத் தந்தார்!

(தொடரும்..)

# கனவில்

உன்னை முற்பகல் நினைவுகளோடுதான்
தேடினேன்
கறுப்புத்திரையில்
உன் சுவடுகளின் புள்ளிகள் ஏதுமில்லை.
தென்படாத உன் வட்டமான
முகத்துக்காக ஏங்கினேன்.
பள்ளிக்கூடம் வெறுமையாய் கிடக்கிறது.
சூரியன் மேற்கிளம்பும் காலையில்
நாங்கள் சீருடையணிந்து,
பள்ளிக்கு சைக்கிள்களில் போனது
நேற்றுத்தானே.



## பள்ளிக்குப் போனபின்னர்...!

வழிகள்தான் பொல்லாதவை
பெரியவாய் திறந்து விழுங்கிவிடும்.
அபாயவளைவுகள் நிறையவேயிருந்தன
நீ எங்கே? என்று தொடர்ந்து தேடியதில்
உன் உதிர்ந்த நகங்களிலிருந்து


முளைத்திருந்த காளான்கள்
மணத்தன நாறி
அதன்பின்பாக
சூரியன் மேற்கிளம்பும் காலையில்
நாங்கள் சீருடையணிந்து
சைக்கிள்களில் பள்ளிக்குப் போனதைக்
கனவில் கண்டேன்.
அன்றுதான்
உனது சீருடையின் ஒரு சிறு பகுதி கிடைத்திருந்தது.

- அங்கவை -

# A-9 னை நீளும் நினைவுகள்

சூரியக் கதிர் கிழக்கில் இருந்துமே
சுடர்ந்து மேற்கு நோக்கி நகர்தல்தான்
பூமியில் நெடுநாளை வழக்கம்; நம்
புண்சுமந்த மண் மீது எழுந்திட்ட
'சூரியக்கதிர்' வடக்குப் பலாலியில்
சுடர்ந்து மேற்காக யாழ்நகர் நோக்கிப்பல்
ஆயிரங்கால்களாலே நடந்தது.
அனல் மழை ஏவி... பின்னால் நகர்ந்தது.

ஏவு வேட்டுகள் எண்ணுக் கணக்கற்று
எட்டுத் திசையின் தடையைத் துடைத்திட,
'வாலை' எட்டத்தில் நின்றுமே ஆட்டிடும்
'வானப்பட்சிகள்' குண்டெச்சம் இட்டிட
யானைச் சேனையை ஒத்த டாங்கிப்படை
யமனின் வாகனங்களாக உறுமிட,
வேகநகர்வுகள் வெட்ட வெளிகளை
மிதித்துக் கொண்டூராக வந்தன.



புத்தூர்ப் பக்கம் இருந்து கிளம்பிக் கால்
போன பக்கம் நகர்ந்தவர்... பின்; சிறுப்
பிட்டி, நீர்வேலி மக்கள் பெயர்ந்தனர்.
பீதியொட்டிய கண்ணால் அழுதனர்.
சொத்துப் பத்தினை மீட்க வழியின்றி
துணிப்பை யொன்றுடன் உயிரினை மீட்டனர்
சத்தம் கிட்டக் கிட்ட வர... அயற்
சனங்கள் அல்லோல கல்லோல முற்றனர்.

பகுதி முப்பத்தொன்பது

ஜெயங்கொண்டான்

# நூல் அகம்

தில்லைச்சிவனின் 'காவல் வேலி' என்ற சிறுகதைத் தொகுதி - தேசியகலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ளது.




இதுவரை காலமும் கவிஞராக மிளிர்ந்த தில்லைச்சிவன், இப்போது சிறுகதை எழுத்தாளராகியுள்ளார். இவர் கனவுக் கன்னி, தாய், தில்லைச் சிவன் கவிதைகள் ஆகிய கவிதைத் தொகுதிகளையும் "நான், ஆசிரியர் ஆகினேன்" என்ற காவியங்களையும், மேலும் சிலநூல்களையும் படைத்திருக்கிறார்.

## 'காவல் வேலி'

இந்தச் சிறுகதைகள் ஏற்கனவே மல்லிகை, ஆதவன் சஞ்சிகைகளில் வெளிவந்ததுடன் பத்திரிகைகளில் வெளிவராத சில சிறுகதைகளும் இந்தத் தொகுதியில் அடங்கியுள்ளன.

இந்தத் தொகுதியிலுள்ள கதைகளில் ஒன்றிரண்டைத் தவிர, மற்றக் கதைகள் எல்லாம், யுத்தத்தில் ஏற்பட்ட துன்ப, துயரங்களை மையமாக வைத்துப் பின்னப் பட்டுள்ளன.

"நீங்கள் இந்தக் கதைத் தொகுதியைப் படிக்கத் தொடங்கினால், ஒரு கதையுடன் நின்றுவிடமாட்டீர்கள். முழுவதையும் படித்து முடித்தே நூலைக் கீழே வைப்பீர்கள் என்று, இந்தநூலுக்கு முன்னுரை வழங்கிய பிரபல பத்திரிகை ஆசிரியர் எஸ்.எம்.கோபாலரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தீவுப்பகுதியைப் பிறந்தகமாகக் கொண்டதால் எனவோ, இக்கதைகள் நிகழும் களமும், அங்கு நிகழ்ந்த சில சம்பவங்களும் - சில சிறுகதைகளுக்குக் கருப்பொருளாகியுள்ளன.

இவரின் தொகுதியிலுள்ள 'சவாரியும் சதியும்' என்ற கதை - சரவணைக் கிராமத்திலுள்ள நாய் வெட்டித் திடலை மையமாக வைத்துப் பின்னப்பட்டுள்ளது. சவாரிப் போட்டிகள் அடிக்கடி நிகழும் இந்தத் திடலில், ஒருமுறை 'பட்டாஸ்' என்று அழைக்கப்பட்ட சவாரி மாடுகள் பற்றியும், சதியால் அந்த சோடி தோல்வியைத் தழுவிக் கொண்டதை மையமாக வைத்தும் இக்கதை ஆக்கப் பட்டுள்ளது. இக்கதையின் கதாநாயகனான 'பட்டாஸ் சின்னத்தம்பி' என்பவர் இன்றும் உயிரோடு வாழ்கின்றார் அந்தக் கிராமத்தில்.

'வக்கிரம்' என்ற கதையும், அவரது வீட்டைச் சுற்றி நிகழ்ந்த சம்பவம் ஒன்றை வைத்து மிகவும் அழகுற ஒரு முற்போக்குச் சிந்தனையுடன் படைத்திருக்கின்றார். 'காவல் வேலி' என்ற கதை வன்செயலில் தங்கள் உயிர்களைத் துறந்த கிருஷாந்தி, கோணேஸ்வரி, சாரதாம்பாள் ஆகியோரை நினைவுபடுத்துகிறது.

பாப்பாப் பாட்டுக்கள், பூஞ்சிட்டுப் பாப்பாப் பாட்டுக்கள், வேலணைத்தீவின் புலவர்களின் வரலாறு, அந்தக் காலக் கதைகள் என்று மேலும் பல நூல்களைத் தந்து, ஆசிரியர் தில்லைச்சிவன் மேலும் பல ஆக்கங்களை ஈழத்திலக்கிய உலகிற்குத் தருவார் என்று எதிர்பார்க்கலாம்.

சிறுகதைத் தொகுதியிலுள்ள கதைகள் ஒவ்வொன்றும் சிறுசிறு கதையாக அழகாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.

- மணிசேகரன்


# பாலையும் சோலையும்

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

நான் புத்தளத்தில் ஆசிரியனாகக் கடமையாற்றிய பொழுது, அங்கு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு வருகைதந்து, என் தலைமையில் உரையாற்றிய பேராசிரியர் கைலாசபதி - என்னை "நண்பர் சொக்கலிங்கம்" என்று கூறி மெய்சிலிர்க்கவைத்ததும், நான் ஹற்றனில் பணியாற்றிய காலத்தில் - அவரும், கலாநிதி வித்தியானந்தனும், கைலாசபதியும் சிவனொளிபாத யாத்திரை செய்துவிட்டு, எனது நண்பர் கணபதிப்பிள்ளையினதும் விருந்தினராய் எம் விடுதிக்கு வந்து சென்றதும் நினைவில் அழியாது நிலைத்துள்ளன.

கலாநிதி சு.வித்தியானந்தன் விரிவுரையாளர் என்பதிலும் பார்க்க, நல்லாசிரியராகவே எம் உள்ளங்களில் வாழ்கின்றார். மாணவர்களுக்கு எந்த இடங்கள் கருவலானவையாயிருக்கும், கடினமானவையாய் இருக்கும் என்று தமது முன் அனுபவங்களால் தெரிந்து வைத்திருந்து, ஐயம் களைந்து, சரியான - வழிகாட்டியவர் அவர். அவருடைய இலக்கணப் பாடங்கள் - இலக்கியம்போலவே சுவைத்தன. இலக்கியமோ (சிலவேளைகளில் விரசமான விளக்கங்களை மாணவிகள் கேட்டுத் தலைகுனிந்து, தம்முன் முறுவலித்த சந்தர்ப்பங்களுக்கும் குறைவில்லை) நயத்தோடு நகைச்சுவையும் மலிந்து அலுப்பற்று சுவை தந்தன.

பின்னாட் பேராசிரியர் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் கூடியகாலம் (9 ஆண்டுகள்) துணைவேந்தராய்ச் சாதனை படைத்தவர். வித்தியானந்தன் இவற்றுக்கப்பால் நண்பனாய், பண்பிலே சேவகனாய் பல மாணவர்களுக்குப் பல வழிகளில் உறுதுணை புரிந்ததோடு, நாட்டாரியல், நாட்டுக்கூத்து, நவீன நாடகம் ஆகிய கலைத்துறைகளுக்கும் அவர் ஆற்றிய பணிகள் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டியவை.



பேராசிரியர் வித்தியானந்தன் அளவு அணுக்கமோ நொருக்கமோ இல்லாவிடினும், என் பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரியவராய், பேராசிரியர் அமரர் பா.கைலாசநாதக்குருக்கள் திகழ்ந்தார். அவர் முனீச்சர வடிவாம்பிகை மீது - நான் யாத்த அந்தாதி, பிள்ளைத்தமிழ் ஆகிய பிரபந்தங்களுக்கு அணிந்துரை வழங்கி, என்னைப் பாராட்டியமையையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

கலாநிதி ஆ.சதாசிவம் (பின்னாள் பேராசிரியர்) சி.முருகவேல், திருமதி மகேஸ்வரி மகாதேவன் ஆகியோரிடம் சிலமாதங்களே கற்கக் கிடைத்தமையால் விதந்தோ, வியந்தோ குறப்பதற்கு எதுவும் இல்லை. (ஆனால், பேராசிரியர் ஆ.சதாசிவம் பற்றி வேறொரு இடத்தில் குறிக்கவேண்டி இருக்கும்.)

விரிவுரைகளைக் கேட்ட அளவோடு மட்டும் தொடர்புற்ற பேராசிரியர் ராய் - கலாநிதி லக்ஷ்மன் பெரேரா, சால்ஸ் சில்வா ஆகியோரைப் பற்றிக்கூற, அதிகம் இல்லை.

வங்களாதேசத்தவரும், கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராய் பணியாற்றியவரும் விரிவுரைகளிலே கலாநிதி மென்டிஸ் (வரலாற்று விரிவுரையாளராய் இருந்தவர் **History of Ceylon, Ceylon under the British** நூல்களில் ஆசிரியர்) போன்றவர்களின் அறிவுத்தரத்தைப் பகிரங்கமாகக் கண்டித்தவரும், சிங்கள இனம் - ஆரிய இனம் என்ற கூற்றை அடியோடு மறுத்தவரான ராய், ஒரு தனித்துவம் வாய்ந்த அறிவாளராய் விளங்கியதை இன்றும் நினைத்துக் கொள்கிறேன்.

1953 இல் கலைப்பிரிவு மாணவராய் பேராதனைப் பல்லைக்கழகம் புகுந்த கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் தனித்துவங்களும், நட்பும் மிகவிரித்துக் கூறப்பட வேண்டியன.

இவர்களின் சிரேஷ்டர்களான - முதுநிலை விரிவுரையாளராய்ப் பணிபுரிந்து மறைந்த தனஞ்சயராசசிங்கம், அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக் கல்வியியற் துறைத் தலைவராய் பணியாற்றி, ஓய்வுபெற்றுள்ள பேராசிரியர் வ. ஆறுமுகம், வெளிநாட்டு ராஜதந்திரியாய் உலகில் பல நாடுகளில் பணியாற்றி, இன்று கனடாவிலே குடியேறியுள்ள அ.கதிரமலைநாதன்,

என்னுடன் சக ஆசிரியராய் இந்துக்கல்லூரியில் பணிபுரிந்து, ஓய்வுபெற்று இன்று கொழும்பு வாசியாகியுள்ள பி.சீனிவாசன், இவர்களோடு கல்விப் பணிப்பாளராய் சேவைபுரிந்து ஓய்வுபெற்ற வே.சபாநாயகமும், பல்கலைக்கழக சபாக்களின் குறிப்பிட்டுக் கூறவேண்டிய, நினைவில் நிலைத்துள்ளோர் ஆவார்.

புதிய மொழி இரண்டையும், நாம் முன்பு கற்காத வரலாறு (விரிவாக கற்காதவை) இலக்கிய விமர்சனம் முதலியவற்றையும் குறுகிய காலத்தில் முற்றல் பருவத்தில் நாங்கள் கற்றவேளையில், அவை சுமையாக இருந்தபோதிலும், பிற்காலத்தில் - கற்கவும், கற்பிக்கவும் பெரிதும் உதவின என்பதற்கு ஐயம் இல்லை.

***

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்புஇலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## ஒத்திசைவுக் கூட்டணியா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணியொன்றை அமைப்பது குறித்த பேச்சுக்கள், கடந்த பல மாதங்களாக இழுபறியுடன் நடந்து வருகின்றன.

இரு கட்சிகளும் இணைந்து கூட்டணியொன்றை அமைப்பது குறித்து முடிவு செய்யப்பட்டிருக்கின்றதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன -

ஆனால், இந்தக் கூட்டணியின் அரசியல் நிலைப்பாடுகள் குறித்த சில தீர்மானங்களை எடுப்பதில் இழுபறிநிலை இன்னும் நீடித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இழுபறி நிலையினால்தான் - இதுவரை இறுதியான உடன்பாடொன்றுக்கு வர, இரு கட்சிகளாலும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணியில், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவே, தொடர்ந்தும் இழுபறி நீடிப்பதாகவும் கூறப்படுகிறது.

நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வொன்றைக்காண - தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பெரிதாக ஆர்வம் காட்டியதில்லை.

குறிப்பாக - சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ - அது இன்று ஆதிக்கம் செலுத்துகின்ற பொதுஜன ஐக்கிய முன்னணியோ - இனப்பிரச்சினை தொடர்பான தெளிவான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை.

இந்தத் தெளிவற்ற கொள்கைப்போக்கினால்தான், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆறாண்டு ஆட்சிக் காலம் 'இரத்தக்களரி' நிறைந்ததாகக் கழிந்து போயிருந்தது.

இப்போது - மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்காக, பொதுஜன ஐக்கிய முன்னணி தன்னைத் தயார்படுத்தி வருகிறது. ஆனால், தனித்து ஆட்சியைப் பிடித்துக்கொள்வதற்கான சாத்தியங்கள், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் குறைவாகவே இருப்பதாகக் கருதப்படுகிறது.

**1994** ஆம் ஆண்டு முதல் **2001** ஆம் ஆண்டு வரையான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலப் பகுதியின், வேதனைகளையும், துன்பங்களையும் மக்கள் இலகுவில் மறந்துவிடத் தயாராகவில்லை.

இதனால் - பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தனிப்பட்ட பலத்தினால், ஆட்சியைப் பிடிப்பதற்குப் பதிலாக - ஜே.வி.பி என்ற 'சிவப்புச் சட்டை' இனவாதிகளுடன இணைந்து கூட்டணியை அமைக்க முடிவு செய்திருக்கின்றது.

இந்தக் கூட்டணியின் நோக்கம் - ஆட்சியைப் பிடிப்பதே தவிர, அதற்கு அப்பாலான எந்த விடயத்திலும் ஒத்திசைவு இருப்பதாகத் தெரியவில்லை. இந்தக் கூட்டணியை அமைப்பதற்கிடையிலேயே எத்தனையோ சுற்றுப் பேச்சுக்கள் நடந்து முடிந்துவிட்டன.

இதற்கே முடிவு காணப்படாத நிலையில் - கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் - தீர்மானங்களை எடுப்பதற்கு இன்னும் எத்தனை பேச்சுக்கள் நடத்தப்படுமோ தெரியாது.

ஆனால்- சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்துக்கொள்வதில் பலத்த சவால்களை எதிர்கொள்கிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

கட்சிக்குள் அனுரா பண்டாரநாயக்கவுக்கும், நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் முறுகல் நிலை நீடிக்கிறது. கட்சியின் ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு கருத்துக்களை - கூட்டணி குறித்துப் பேசுகிறார்கள்.

அதுபோன்றே, ஜே.வி.பியும் மிகுந்த அவதானத்துடன் தான் இந்தக் கூட்டணியை அமைப்பதற்கு முன்வந்திருக்கிறது. ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் லால் நந்த- அண்மையில் வெளியிட்ட கருத்து முக்கியமானது.

ஜனாதிபதி சந்திரிகாவை நம்பமுடியாது என்றும், லங்கா சமசமாசக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்கு - பொதுஜன ஐக்கிய முன்னணி எத்தனை துரோகங்களைக் செய்துள்ளதென்பதைத் தாம் அறிவோம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக, ஜே.வி.பி. மிகுந்த எச்சரிக்கையுடன்தான், சுதந்திரக் கட்சியுடன், கூட்டணி வைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது.

ஜே.வி.பியின் துணையுடன் ஆட்சியைப் பிடிக்கத் திட்டமிடும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஒருபுறம் - இவர்களின் தந்திரத்தை அறிந்துகொண்டு இந்த வலைக்குள் சிக்கிக்கொள்ளாமல் தனது நலனை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் செயற்படும் ஜே.வி.பி. மறுபுறமுமாகக் களத்தில் நிற்கின்றன.

இந்தக் கட்சிகள் இரண்டும் கூட்டணி அமைத்துக் கொள்வது ஒன்றும் ஆச்சரியமான செய்தியாகத் தெரியாவிட்டாலும் -

வருங்காலத்தில், இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் இக்கட்சிகள் ஒத்த கருத்துடன் செயற்படுமா என்பது சந்தேகமே. ஆனால், இப்போதைய நிலைப்பாட்டில் - சமாதான முயற்சிகளிலும் சரி, தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் விடயத்திலும் சரி இந்த இரு கட்சிகளுமே ஒத்திசைவாகத்தான் இருக்கின்றன என்பது உண்மை.

# அரசாங்கத்தின் கூலிப்படையாக இருப்பவர்கள் தமிழினத்துக்காக குரல்கொடுக்க முடியாது!

## நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

"அரசின் கூலிப்படையாக இருப்பவர்கள், தமிழினத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கமுடியாது" இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் வீதியில் இடம்பெற்ற, கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

கரும்புலிகள்தான் தமிழர்களின் கேடயமாகவுள்ளனர். தமிழின விடுதலைக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த கரும்புலிகளை - தமிழர்கள் உயிர்வாழும்வரை நினைவுகூர வேண்டும். நெல்லியடியில் நடைபெற்ற முதற் கரும்புலி மில்லரின் தாக்குதலின் பின்னர், தமிழரின் பலம் கரும்புலிகள்தான் என்று சிங்கள சமூகம் தெரிந்துகொண்டது. பிரபாகரன்தான் தமிழினத்தின் தலைவன். விடுதலைப் புலிகள்தான் எமது ஏகப்பிரதிநிதிகள் என நாம் தெரிவித்துள்ளோம். மறைந்த எமது கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலமும் அதையேதான் இறக்கும்வரையும், கூறிவந்தார்.

விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கவில்லை எனக்கூறிய ஆனந்தசங்கரியின் கூற்றுக்குத் தமிழினம் உகந்த பதிலை அளிக்கும்.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும், சந்திரிகாவும் என்ன சொன்னாலென்ன, எமது ஏகப்பிரதிநிதிகள் என்றுமே விடுதலைப் புலிகள்தான்.

பணத்தை வாங்கிக்கொண்டு அரசாங்கத்தின் கூலிப் படைகளாக இருப்பவர்கள் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ரா)

# 50 வீத நிதியை வெட்டியமையே கல்வி சீர்குலைவுக்கு காரணம்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

கல்வித்துறைக்காகத் தாம் ஒதுக்கீடுசெய்த நிதியில் ஐம்பது வீதத்தைக் குறைத்து, கல்வித்துறைக் கட்டமைப்புச் சீர்குலைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கல்வி சீர்குலைக்கப்பட்டது சம்பந்தமாகப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் கவலையடைந்துள்ளனர். அதிகாரங்களைத் தக்கவைக்கும் நோக்கில் ஆட்சியிலுள்ள அரசு செயற்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு நகரப்பகுதியில் சோதனை கெடுபிடி தீவிரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான படுவான்கரைப்பகுதியில் இருந்து, படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களில், கடந்த சில நாட்களாகப் படையினரும், பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினருமாகச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பிலாந்துறை, மண்முனைத்துறை, பட்டிருப்பு, செங்கலடி, வாகரை போன்ற பல பகுதிகளில் என்றும் இல்லாதவாறு இத்தகைய சோதனை நடவடிக்கைகளைத் திடீர்திடீரெனப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுணதீவுப் பாலத்திலுள்ள சோதனைச்சாவடியால் செல்லும் பயணிகளில், சந்தேகத்திற்கு இடமானவர்கள் தனித்தனியாக அழைத்துச்செல்லப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனால், பொதுமக்களிடையே மீண்டும் பீதி ஏற்பட்டுள்ளது.

# சிங்கள தேசத்துடன் சமமாகப் பேச புலிகள் ஈட்டிய வெற்றியே காரணம்!

## நெடுந்தீவில் சிவாஜிலிங்கம் உரை!



(நெடுந்தீவு)

தமிழீழ தேசம் - சிங்கள தேசத்திற்குச் சமமாகப் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து பேசுவதற்கு எமது வீரம் செறிந்த விடுதலைப் போராட்டமும், தமிழீழ விடுதலைப் புலிகள் ஈட்டித்தந்த வெற்றியும்தான் காரணம் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவில் இடம்பெற்ற விளையாட்டு விழாவில், வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்றுக்கொண்ட வெற்றிகளுக்கு முதுகெலும்பாக இருந்தவர்கள் கரும்புலிகள்.

ஆனையிறவு முகாமைப் புலிகள் வெற்றிகொள்வதற்கு, அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஆட்லறிகளைக் கரும்புலிகள் தகர்த்து அழித்ததுதான் முக்கிய காரணம். அரசாங்கம் யுத்தத்தால் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்ற நிலைமைக்குக் கொண்டுவர இரண்டு நிகழ்வுகள் காரணமாக இருந்தன. ஒன்று - ஆனையிறவுப் பெருந்தளம் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டமை, மற்றையது - கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீதான தாக்குதல், எனத்தெரிவித்த சிவாஜிலிங்கம், அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கையின் யுத்தவரலாற்றில் ஒருவருட யுத்தச் செலவிற்காக 8000 கோடி ரூபாவைச் செலவிட்ட அரசாங்கம், ஒரு இரவில் கரும்புலித் தாக்குதலின் விளைவாகப் பலநூறு கோடி ரூபாவை இழந்த பின்னர்தான், பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கான முடிவுக்கு வந்தது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் எமது இனம் விடுதலையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாகவிருந்தால், எமது தமிழர்சேனை பலமாக இருக்கவேண்டும், கரும்புலிகள் பலமாக இருக்கவேண்டும். இதை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்தார். (113)

# மன்னார் மாவட்டத்தில் கரும்புலி தினநிகழ்வு!

மன்னார் மாவட்டத்தில் கரும்புலிகள்தின நிகழ்வுகள் அடம்பன் - ஆண்டான்குளம் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஒளிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் பூராசா ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியை, மன்னார் மாவட்ட உதவி அரசியற்துறைப் பொறுப்பாளர் மூர்த்தி ஏற்றிவைத்தார்.

முதலாவது கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்குக் கரும்புலி மாலதியின் தந்தை மலர் அஞ்சலி செலுத்தினார். ஆண்டான்குளம் சந்தியிலிருந்து கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி - ஆண்டான்குள விளையாட்டு மைதானத்தை வந்தடைந்ததும் மேற்படி நிகழ்வுகள் நடைபெற்றன. (201)

# தாதிமாரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக மோசடி

## பொலிஸாரால் கண்டுபிடிப்பு

அமெரிக்காவில் தாதிமாருக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி, மோசடியில் ஈடுபட்ட தனியார் முகவர் நிறுவனமொன்றைக் கொழும்பு ஊழல் மோசடிப்பிரிவு கண்டுபிடித்துள்ளது.

கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் போதி லியனகேயின் பணிப்பின் பேரில் ஊழல் மோசடிப்பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் எஸ்.பி.வி.கந்தசாமி தலைமையிலான குழுவே, கல்கிசையில் வைத்து சயீட் முஹமட் மௌலானா என்ற சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

ஏராளமான தாதிகளிடம் இவர் கூடுதலான பணத்தைப் பெற்று, பாரிய மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை லேடி ரிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி உட்பட பல்வேறுபட்ட ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட தாதிமார்கள் இவர் மீது முறைப்பாட்டைச் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச விமான நிலையத்தை தம்புள்ளையில் அமைக்க ஏற்பாடு

தம்புள்ளை நகரில் சர்வதேச விமான நிலையமொன்றை அமைக்கும் முதற்கட்டப் பணிகளை ஆரம்பிக்குமாறு, மத்திய பிராந்திய அபிவிருத்தியமைச்சர் திஸ்ஸ அந்தநாயக்க - மத்திய பிராந்திய முதலீட்டு ஆணைக்குழு அதிகாரிகளுக்குப் பணிப்புரையினை வழங்கியுள்ளார்.

மத்திய பிராந்திய முதலீட்டு ஆணைக்குழுவின் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் - மத்திய பிராந்தியத்தில் சர்வதேச விமானநிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். தம்புள்ளையில் இந்த விமான நிலையத்தை அமைப்பதற்கான இடம், நிலப்பரப்பு என்பனவற்றைத் தெரிவுசெய்து, அதற்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க பணிப்புரை வழங்கினார். மத்திய பிராந்தியத்தில் முதலீடு செய்யவும், பல்வேறு தொழில்களை ஆரம்பிக்கவும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரிதும் நாட்டம் கொண்டுள்ளனர். அவர்கள் நாட்டில் எங்கு செல்ல வேண்டுமானாலும் மிகவிரைவாகப் பிரயாணம் செய்வதற்கு விமானசேவை வசதியை எதிர்பார்க்கின்றனர்.

எனவே, மத்திய பிராந்தியத்தில் தம்புள்ள நகரில் சர்வதேச விமானநிலையமொன்றினை நிறுவுவது அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

# அகதிகள் இந்தியாவிலிருந்து பாதுகாப்பாக தாயகம் திரும்புவதற்கு வழிவகை கிட்டுமா?



செய்திக் கட்டுரை

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகச் சொந்த வாழ்விடங்கள், உடைமைகள் மற்றும் சொத்துக்களை விட்டெறிந்து விட்டு - உயிரை மட்டும் பாதுகாத்தால் போதும் என்று இடம்பெயர்ந்து, அகதி வாழ்க்கை வாழ்வோரில், இந்தியாவிலுள்ள அகதிமுகாம்களில்



தமிழகக் கடற்கரையில் ஈழ அகதிகள்.

வாழ்வோர் பெரும் துன்பங்களைத் தற்போதும் அனுபவித்து வருகிறார்கள்.

நாட்டில் தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலையிலும், இந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் துன்பப்படும் மக்களைத் திருப்பி அழைக்க, ஆக்கபூர்வமான பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படாமையினால், பல்வேறு தடைகளையும் உடைத்துக் கொண்டு தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

சட்டத்திற்கு முரணான வகையில், இந்திய மீன்பிடிப் படகுகள் மூலம், பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து- உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் இவர்கள் இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மைக்காலங்களில் - அதாவது, கடந்தமாதம் 05 ஆம் திகதி 32 பேரும், 23 ஆம் திகதி 15 பேரும் என- மொத்தமாக நாற்பத்தியேழு பேர் நெடுந்தீவில் தரையிறங்கி, பெரும் சிரமங்களுக்கு மத்தியில், தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர். இந்தியாவிலிருந்து புறப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 4,000 ரூபா வீதம் பயணக்கட்டமாகச் செலுத்தி, மன்னாரில் கொண்டுவந்து இறக்குவதான உறுதிமொழியுடன்தான இவர்கள் புறப்பட்டார்கள்.

ஆனால், இடைநடுவில் வைத்து படகோட்டிகள் - கடல் சீரில்லை, கொந்தளிப்பு என்று பல்வேறு சாக்குப் போக்குகளையும் கூறி, நெடுந்தீவில் கொண்டுவந்து இறக்கி விடப் படுகிறார்கள். அதுவும் கரைக்கு வந்தால் கடற்படையினரிடம் பிடிபட்டு விடுவோம் என்ற அச்சம் காரணமாக, மார்பளவு தண்ணீரிலேயே அகதிகள் இறக்கிவிடப்படுகின்றார்கள். இதனால், தாயகம் திரும்பும் மக்கள் கொண்டு வரும் உடைமைகள் கடல் நீரில் நனைந்து விடுவதும், அவர்கள் தத்தளிப்பதும் தொடர்கிறது.

கடந்த காலங்களில், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி வந்த பலர், மன்னார்ப்பகுதி மண்மேடொன்றில் இறக்கி விடப்பட்டதும், அங்கிருந்து மன்னார் திரும்ப வழியில்லாமல், ஒருவரைத் தவிர ஏனையோர் கடலுடன் சங்கமித்ததும் நாம் அனைவரும் அறிந்த ஒரு துயரச் சம்பவம்.

ஏன் இந்தளவிற்குத் தமிழனாகப் பிறந்தவனுக்கு துன்பம் தொடர வேண்டும்? சொந்த இடம் திரும்ப நினைப்பவர்களை, அவர்கள் சுய விருப்பத்தின் பெயரில் தாயகம் திரும்புவதற்கு அரசாங்கமும், மற்றும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் ஏற்ற நடவடிக்கை எடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை. இந்த நிலைமையால், மக்கள் உயிரைப் பணயம் வைத்து- ஆபத்தான கடல் வழிப் பயணத்தை மேற்கொண்டு நாடு திரும்புகிறார்கள்.

இவர்கள் தமது சொந்த இடங்களைச் சென்றடைவதற்கு முன்னர், இத்தனை வருடமும் அகதிவாழ்கையால் அடைந்த துன்பங்களையெல்லாம் குறுகிய காலத்தில் அனுபவிக்கவேண்டியநிலை காணப்படுகிறது. தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் உள்ளவர்களைச் சுய விருப்பின் பேரில் தாயகத்துக்கு விமானம் மூலம அழைத்துவரும் திட்டத்தில்- யு.என்.எச்.சி.ஆர் ஈடுபாடு காட்டி வருகிறது. இது வரவேற்கத் தக்கதொரு விடயம்தான்.

ஆனால், இது தொடர்பாக அண்மையில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகள் கருத்துத் தெரிவிக்கையில்- குடிமனைகள், வீட்டுத தளபாடங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, உயிர் பிழைத்தால் போதும் என்று, கடந்த 13 வருடங்களுக்கு முன்னர் வெளியேறிய எமது, எந்தவொரு சொத்துமே இங்கே இருக்காது.

நாம் தமிழகத்தில் முகாம்களில் வாழ்ந்தபோது எமக்குத் தேவையான தளபாடங்கள், வீட்டுச் சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை, சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தில் வாங்கி வைத்துள்ளோம். விமானம் மூலம் ஒருவர் 25 கிலோ எடையுடைய பொருட்களையே கொண்டுவரமுடியும். இதனால், ஏனைய பொருட்களை அங்கேயே விட்டெறிந்துவிட்டு வரவேண்டியுள்ளது. அத்துடன், யு.என்.எச்.சி.ஆர் மூலம் பதிவு செய்தால், உடனே பயணிக்கமுடியாது. நீண்ட காலம் காத்திருந்தே பயணத்தை மேற்கொள்ளமுடியும் எனவும் ஆதங்கப்பட்டனர். இந்த விடயம் தொடர்பாக யு.என்.எச்.சி.ஆர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, தாயகம் திரும்புவதற்கு விரும்பும் இலங்கை அகதிகள் முதலில் - இந்தியாவிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில்

**கண்ணன்**

பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். பின்னர் அவர்கள் தொடர்பான விபரங்கள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப் படுகின்றன. அந்த விபரங்களின் பிரகாரம், ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று, அவர்களது குடியிருப்பு உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளதா, கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதா? சொந்த வீட்டில் வேறு யாராவது தங்கியுள்ளனரா? போன்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு, அவை எல்லாம் சாதகமாக இருந்தாலேயே, அகதிகள் விமானம் மூலம் அழைத்து வரப்படுகின்றனர். அதனால்தான் காலதாமதம் ஏற்படுகின்றது எனவும் கூறினார்.

யு.என்.எச்.சி.ஆரின் நீண்ட சிக்கல் நிறைந்த நடைமுறைகளால், மக்கள் படகுகள் மூலம் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். இதனால், அகதிகளைக் கப்பல் மூலம் அழைத்துவர நடவடிக்கை எடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும் என நாடு திரும்பும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சட்டத்திற்கு முரணான வகையில், படகுகள் மூலம் தாய்நாடு திரும்பும்போது, இடைநடுவில் கடற்படையினரின் அச்சுறுத்தல்கள் மற்றும் இயற்கையின் சீற்றம் போன்றவற்றை எதிர்கொண்டு கரைசேர்வோம் என்ற மனத்துணிவுடனேயே நாம் புறப்படுகின்றோம். எல்லோராலும் இப்படி மனத்துணிவுடன் படகுமூலம் திரும்ப முடியாது என்பது சந்தேகமே. இதனால், தாயகம் திரும்பும் அகதிகளை ஒழுங்குமுறையாக, அவர்கள் உடைமைகளுடன் இங்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று, அண்மையில் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய மக்கள் தெரிவிக்கின்றனர். இது நியாயபூர்வமான தொரு கோரிக்கைதான்.

# சமாதானம் தொடர வேண்டுமானால் கரும்புலிகளின் பலத்தை பேணவேண்டும்!

## நெல்லியடி நிகழ்வில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

சமாதானம் நிலைபெறவேண்டுமானால் - தமிழர்களுடைய பாதுகாப்புக் கவசங்களாக இருக்கின்ற கரும்புலிகளின் பலமும், விடுதலைப் புலிகளினுடைய பலமும் தொடர்ந்து பேணப்படவேண்டும் என்பது யதார்த்த பூர்வமானது. புலிகளின் பலமே தமிழரின் பலம் என்பதால்தான், எமது தலைவர் இந்த ஒப்பந்தகாலத்திலும் எமது கட்டமைப்பை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற, கரும்புலிகள்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

எங்களுடைய தேசியபலம் பெருகவேண்டுமானால், நாங்கள் எல்லோருமே விழிப்பாக இருக்கவேண்டும்.

உலக விடுதலைப் போராட்டம் எல்லாவற்றுக்கும் மூலோபாயங்கள் இருக்கின்றன.

அதேபோல, எங்களுடைய விடுதலைப் போராட்டத்துக்கும் மூலோபாயங்கள் இருக்கின்றன. ஒன்று



மக்கள், இன்னொன்று நட்புறவுச் சக்திகள்.

நட்புறவுச் சக்திகளைத் தோற்கடிப்பதற்கு எதிரிகள் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளைத் தலைவர் முறியடித்து வருகின்றார். எனவே, நட்புறவுச் சக்திகளின் ஒத்திசைவும், ஒத்துழைப்பும் இந்த விடுதலைப் போராட்டத்திற்குச் சென்றடைகின்ற போது, எமது விடுதலைப் போராட்டம் வெற்றிபெறும்.

இந்த மண்ணில் தமிழ்மக்கள் அமைதியாகத் தங்களைத் தாங்களே நிர்வகித்து, தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானித்து மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற ஒரு நிலை தோற்றம் பெறவேண்டும் என்பதற்காகவே கரும்புலிகள் மகத்தான தியாகங்களைச் செய்துள்ளார்கள்.

கரும்புலிகளது பலம்தான் இன்று தமிழர்களின் பெரும் பாதுகாப்புக் கவசமாக இருக்கிறது.

அதனால்தான் சந்திரிகா அம்மையார் கரும்புலிகள் அணி கலைக்கப்பட வேண்டும் என்கின்றார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பொலிஸாரின் ஆலோசனையை தமிழ்க்குழுவினர் ஏற்கவில்லை

## என்கிறார் கிழக்கு பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)

பாதுகாப்புத் தொடர்பாகப் பொலிஸாரினால் தெரிவிக்கப்படும் ஆலோசனைகளை உரியமுறையில் பின்பற்றாமையினால், மட்டக்களப்பில் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதைத் தடுக்க முடியாதுள்ளது என்று, பொலிஸ் அத்தியட்சகர் வசந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ இயக்க உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் தொடர்பாகவே அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) அலுவலகங்களுககுப் போதிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் - இந்த இயக்க உறுப்பினர்கள் அவசியம் ஏற்படுமிடத்து வெளியே செல்லும்போது, பொலிஸ் பாதுகாப்புப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆயினும், இதனை உரிய முறையில் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் பின்பற்றுவதில்லை என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## நயினையில் நாளை திருமஞ்சத் திருவிழா

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் 10 ஆம் நாள், திருமஞ்சத் திருவிழா நாளை செவ்வாயக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று, கைலாச வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். இரவு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட சித்திரத் திருமஞ்சத்தில் அம்பாள் வீதிவலம் வருவார். இதையடுத்து, பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரின் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

## கல்வயல் விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

(மட்டுவில்)

சாவகச்சேரி - கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், சந்தானகோபாலர் ஆலயங்களுக்கான கும்பாபிஷேகம், எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. புதன்கிழமை நண்பகல் 12 மணிமுதல் மாலை வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (24)

## உள்ளூராட்சி வாரம

(யாழ்ப்பாணம்)

'உள்ளூராட்சி வாரம்' எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை அனைத்துப் பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் யாழ். மாநகரசபை என்பவற்றில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்காக இவ் அலுவலகங்களில் உள்ளூராட்சி வாரம் தொடர்பான பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன், இந்நிகழ்வினைச் சிறப்பிக்கும் முகமாக மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## இலந்தைத்திடல் வீரமாகாளி மஹோற்சவம

(மட்டுவில்)

சரசாலை - இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் முதலாவது மஹோற்சவ விழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இதுவரை காலமும் அலங்கார உற்சவமாக நடைபெற்ற வருடாந்த உற்சவம், இவ்வாண்டு முதல் மகோற்சவமாக மாற்றப்பட்டு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (24)

## நகரில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

யாழ்ப்பாண நகரப்பகுதியில் நாய்களின் தொல்லை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள நகரப்பகுதியில், நாய்களின் நடமாட்டத்தினால் பொதுமக்கள் பீதியடைந்தநிலையில் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

யாழ்.ஆஸ்பத்தரிவீதி, முனீஸ்வரன் கோயில்வீதி, பஸ் நிலையம் போன்ற இடங்களிலேயே கட்டாக்காலி நாய்கள் அதிகமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பனை தென்னைவள சமாச பொதுமுகாமையாளராக செல்வராசா

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின், பொது முகாமையாளராக பொ.செல்வராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பத்து வருடங்களாக, அச்சுவேலி பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காளராகக் கடமையாற்றிய இவர், கடந்த முதலாம் திகதி முதல் சமாசப் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (128)

# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை அணி முதலிடம் பெற்றது

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 8 ஆவது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் - திருகோணமலையில் கடந்த வாரம் நடைபெற்றன. இதில் திருகோணமலை மாவட்டம் 248 புள்ளிகளைப் பெற்றது. இரண்டாவது இடத்தினை யாழ்ப்பாண மாவட்டமும் (234 புள்ளி), மூன்றாவது இடத்தினை அம்பாறை மாவட்டமும் (141 புள்ளி) பெற்றுக்கொண்டன. இதில் மன்னார் 92, மட்டக்களப்பு 75, கல்முனை 74, முல்லைத்தீவு 65, வவுனியா 53, கிளிநொச்சி 32 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

இதில் பெண்களுக்கான போட்டிகளில், 15 வயதுப் பிரிவில் - முல்லைத்தீவு அக்கராயன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.தாரணி, 17 வயதுப் பிரிவில் - திருகோணமலை புனித மரியாள் கல்லூரியைச் சேர்ந்த கலிஸ்டா ரொசனி, 19 வயதுப் பிரிவில் - அம்பாறை பண்டாரநாயக்கா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்ரி.எஸ்.மல்காந்தி மற்றும் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்மோசுந்தி ஆகியோரும் 21 வயதுப் பிரிவில்- திருகோணமலை புனித மரியாள் கலலூரியைச் சேர்ந்த பி.ஜெயசுபாசினியும் வெற்றி வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப்பட்டு, வெற்றிக் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆண்களுக்கான போட்டிகளில், 15 வயதுப் பிரிவில் - திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியைச் சேர்ந்த மு.நஜிமுல்லா, 17 வயதுப் பிரிவில் - அம்பாறை டி. எஸ்.சேனநாயக்கா கல்லூரியைச் சேர்ந்த ஏ.ஜி.ஜி.ரத்னதீர, திருகோணமலை கந்தளாய் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ருவான் ஶ்ரீலால், 19 வயதுப் பிரிவில் - முல்லைத்தீவு வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையைச் சேர்ந்த கே.கோகுலரூபன், 21 வயதுப் பிரிவில் - யாழ்ப்பாணம் அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி.துசான், திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.ரதீசன் ஆகியோர் வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வட - கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் கே.மகாலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணங்களைவழங்கினார்.


## மாகாண விளையாட்டு பரிசளிப்பில் இருந்து...




8 ஆவது மாகாணமட்ட விளையாட்டுப்போட்டியில் முதலிடம்பெற்ற திருமலை மாவட்ட அணி, வட - கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் மகாலிங்கத்திடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்கிறது.



8 ஆவது மாகாணமட்ட விளையாட்டுப்போட்டியில் இரண்டாமிடம் பெற்ற யாழ். மாவட்ட அணி, வட - கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் மகாலிங்கத்திடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்கிறது.



21 வயதுப் பிரிவில் இணைச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி மாணவன் ரி.துசான்.



21 வயதுப் பிரிவில் இணைச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்ப திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் ஆர்.ரதீசன்.

(படங்கள் : கௌதமன் - திருமல

# வன்னிச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பேருதவி!

## கிளிநொச்சி பாலர் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாராட்டு

வன்னிப்பகுதியில், சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியதாகும். பல நூற்றுக்கணக்கான பாலர் பாடசாலைகளை நிறுவி, மேற்பார்வை செய்துவரும் இவர்களின் சேவைகள் - சகலராலும் வரவேற்கக்கூடியதாக உள்ளது என, கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப்பணிமனையின் பாலர் கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவஞானம் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஆதவன் கல்வி நிலையப் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட திட்ட இணைப்பாளர் ஜெறாட் உரையாற்றும்போது -

பல வசதியீனங்களுக்கு மத்தியிலும், சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு வழிகளிலும் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டுவருகிறது. இது எமது நிர்வாகக் கட்டமைப்பில், பாலர் கல்விக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது என்றார்.

# அமெரிக்காவினை எதிர்க்கும் எவர் மீதும் தாக்குதல் நடக்கும்!

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி புஷ் எச்சரிக்கை



அமெரிக்கா தொடர்ந்தும் சர்வதேச பயங்கரவாதத்துடன் போரிட்டு வருகிறது என, அமெரிக்க சுதந்திர தினத்தை முன்னிட்டு நடந்த படை நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

ஒகியோவிலுள்ள விமானப்படைத் தளம் ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் பேசிய அவர், அமெரிக்காவை எதிர்க்கும் எந்தப் பயங்கரவாத அமைப்பும், சட்டவிரோதக் குழுவும் - அமெரிக்கத் தாக்குதலுக்கு இலக்காகும் எனவும் தெரிவித்தார்.

வைபவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றி - போர் விமானங்கள், தாக்குதல் விமானங்கள், ஸ்ரெல்த் குண்டு வீச்சு விமானங்களின் வான்வெளி ரோந்து காணப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தனது உரையில், ஈராக் விவகாரம் குறித்தோ, அங்கு தினமும் நடக்கும் தாக்குதல்கள் குறித்தோ எதுவும் அவர் குறிப்பிட்டவில்லை.

இதேவேளை, அல் - ஜெசீரா தொலைக்காட்சியில் - ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசையினின் உரை ஒளிபரப்பானதைத் தொடர்ந்து, இந்தவுரை குறித்து சி.ஐ.ஏ உளவுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. உரையில் ஒலிப்பது சதாமின் குரல்தானா என்ற ஆய்வுகள் நடைபெற்று வருகிறன.

உலகவலம்

# பி.பி.ஸியின் குற்றச்சாட்டுக்கு ரொனி பிளேயர் கடும் ஆட்சேபம்!

(லண்டன்)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதென்ற தகவல் மூலம் - பொதுமக்களைத் தவறாக வழிநடத்தியதாக - தன்மீது, பி.பி.ஸி. செய்தி நிறுவனம் தொடர்ந்து வெளியிட்டு வரும் கண்டனங்களுக்குப் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

லண்டன் ஒவ்சேவருக்கு அவர் அளித்த பேட்டியில், ஒரு பிரதமர் மீது, இப்படி அபாண்டமாகக் குற்றஞ்சாட்டுவது கடுமையான ஒரு செயலாகும். அனைவரும் இப்போது, அந்தக் குற்றச்சாட்டைத் தவறு எனக் கூறுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் இந்த ஆட்சேபம் குறித்து கருத்துவெளியிட்ட பி.பி.ஸி. தனது அரசியலமைப்பு உரிமையின் பிரகாரம், சரியானதை வெளியிடும் உரிமை தமக்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

'பி.பி.ஸி. எவரையும் தவறாகக் குற்றஞ்சாட்டமாட்டாது' என்றார் பி.பி.ஸியின் கலாசாரச் செயலாளர் ரெசா ஜோவல்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# போராட்டத்தின் பலமாக கரும்புலிகள் உள்ளனர்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை



(ஆழியவளை)

'விடுதலைப் போராளிகளின் சக்திக்கு உட்பட்ட பெரும் தியாகத்தால் நிகழ்த்தப்படக்கூடிய தாக்குதல் வடிவமாக கரும்புலி வடிவம் பிறந்தது. இத்தகைய சூழலில் மில்லர் அதற்கு செயல்வடிவம் கொடுக்க முன்வந்தார். இன்று எமது போராட்டத்தின் பலம்பொருந்திய வடிவமாக கரும்புலி வடிவம் உள்ளது.' இவ்வாறு புலிகளின் பாசறையில் நடைபெற்ற கரும்புலி நாள் நிகழ்வில், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், எமது கரும்புலிகளை, வெளியே தற்கொலைக்குண்டுதாரிகள் என்றும், பயங்கரவாதிகள் என்றும் விமர்சிக்கின்றார்கள். அவர்கள் பங்கரவாதத் தாக்குதல் புரியும் தற்கொலையாளிகள் அல்ல, தமது மக்களின் பாதுகாப்பையும், உரிமையையும் நிலைநாட்ட, உயர்ந்த ஈகத்தைச் செய்யும் தற்கொடையாளிகளே அவர்கள்.

இதேவேளையில், கரும்புலித் தாக்குதல்களில், எந்தப் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்று - எடுக்கப்பட்ட கவனமும், சிரத்தையும் - எம்து கரும்புலிகள் குருட்டுத்தனமான பயங்கரவாதத் தாக்குதலாளர்களல்ல என்பதை விளங்க வைக்கும். இந்தக் கரும்புலிகளே, எமது மக்களின் உரிமைப் போராட்டத்தில் பெரும் தடைக்கற்களை அகற்றும் சக்திகளாக விளங்கியவர்கள் எனக் குறிப்பிட்டார். (122)

### இராணுவக் கெடுபிடிகளால்
# பொதுமக்கள் பாதிப்பு குறித்து வானொலி நிகழ்ச்சி தயாரிப்பு

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவச் சோதனை நடவடிக்கைகள் காரணமாக, பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் தொடர்பான விசேட வானொலி நிகழ்ச்சி ஒன்று தயாரிக்கப்படவிருக்கிறது.

இந்த விசேட நிகழ்ச்சித் தயாரிப்புக்காகத் தயாரிப்பாளர் குழு ஒன்று இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

# திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் மீள்குடியமர்வதற்கு அனுமதி!

திருக்கேதீஸ்வர ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை, மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் உடனடியாக மீளக்குடியேற்ற நடவடிக்கைகளை எடுப்பதாகவும், அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தாம் தயாராக உள்ளதாகவும், வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதிகளில் வீதிகளும், கட்டடங்களும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவித்த, வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி, இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. இக் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளச்சென்ற அமைச்சர் மகேஸ்வரன், அங்கு வருகைதந்த வன்னிப்பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது, திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அயற் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. குருபீடங்களும் தகர்க்கப்பட்டுள்ளன.

தற்போது - இப்பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேறியுள்ளதனால், அப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு, அமைச்சர் மகேஸ்வரன் இராணுவத் தளபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்கையிலேயே, வன்னி இராணுவத் தளபதி சுசில் சந்திரபால குறித்த பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தான் ஒத்துழைப்பு வழங்குவதாகத் உறுதியளித்தார்.

### விபத்தில் சுவிஸ் நாட்டவர் இருவர் காயம்!

(பருத்தித்துறை)

சுவிஸிலிருந்து இலங்கைக்கு உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டுள்ள பிரயாணிகள் இருவர், நேற்று மாலை பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுவிஸ் - சூரிச்சைச் சேர்ந்த அன்டிராஸ் ஸ்பைஸ் (வயது 45) என்பவரும், இவருடன் சென்ற செ. லொயிட்(வயது 17) என்பவருமே காயமடைந்தவர்கள் ஆவார். (111,121)

### தோப்பூர் குண்டு வீச்சு; பொதுமகன் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள - தோப்பூரில், கைக்குண்டுத் தாக்குதலில் முஸ்லிம் பொதுமகன் ஒருவர் பலியானார். இவரின் மனைவியும் காயமடைந்தார். இவருக்கும், அரசியல் கட்சிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் நேறறு முன்தினம் இரவு இடம்பெற்றது.

## ஆனந்தசங்கரியின் தலைமை...

பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற பிரேரணை கொண்டுவரப்படும் எனவும் கூட்டணி வட்டாரங்களில் எதிர்பார்ப்பு நிலவியது.

நேற்று நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில், ஆனந்தசங்கரியும் கலந்துகொண்டிருந்தார். ஆனால், இந்தக் கூட்டத்தில் இவரைப் பதவியிலிருந்து விலக்கும் கோரிக்கை எதுவும் மத்தியகுழு உறுப்பினர்களால் முன்வைக்கப்படாததால், இது குறித்துப் பேசப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை - நேற்றைய கூட்டத்தில், விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியாக இணைந்து செயற்படுவதென்றும்,

கட்சியின் விவகாரங்கள் தொடர்பாக, நாளை மறுநாள் மீண்டும் மத்தியகுழுவைக் கூட்டி ஆராய்வதென்றும் முடிவு செய்யப்பட்டதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (ச)

## விடுதலைப்...

அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் கொலைகளை நிறுத்த முடியும் என்றும், மேற்படி அரசியற் கட்சிகள் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கேட்டுக்கொண்டுள்ளன. (01)

## கண்காணிப்பு...

டன் பேச்சுக்களை நடத்தவுள் ளார். வன்னியில், இவர் கடல் வலய பாதுகாப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தந்தையின்...

சகோதரனான துஷ்யந்தன் (வயது 20) கையில் காயமடைந்தார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்து தம்பியாரைத் தந்தை தாக்கியபோது, அதனைத் தடுத்தவரே நெஞ்சுப்பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கானார். தந்தை தலைமறைவாகிவிட்டார். சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (111,121)

## உயர் பாதுகாப்பு...

நைஜீரியாவில் இருந்தும் ஓய்வுபெற்ற உயர் இராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இந்த விசேட மாநாட்டில், கலந்துகொள்ளும்படி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிறிலால் வீரசூரியவும், இந்த விசேட மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

மேலும், யாழ்.மாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வலர்கள் பலரும் இந்த விசேட மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

## வெலஸ்பேர்க்....

எனினும் நாளை வன்னிக்கு வரும் வெலஸ்பேர்க், தம்முடன் இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பான அரசின் யோசனை எதனையும் எடுத்துவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - நாளைமறுதினம் இடைக்கால நிர்வாக அலகு தொடர்பான, அரசின் திட்டவரைவு வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கொழிகாமம் தேநீர்க்கடை விசமிகளினால் தீக்கிரை!

கொடிகாமத்திலுள்ள தேநீர்க் கடையொன்று, கடந்த வெள்ளியன்று இரவு தீக்கிரையாக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் கணபதிப்பிள்ளை யோகநாதன் என்பவரது கடையே முற்றாகத் தீக்கிரையானது. இரவு ஏழு மணிக்கு கடையைப் பூட்டிவிட்டுச் சென்றபின், கடை எரிவதாக இவருக்குத் தகவல் கிடைத்தது. விசமிகளின் நாசவேலையாலேயே கடை தீக்கிரையானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - அன்றிரவு 12 மணியளவில் கச்சாய் பகுதியில் சி.குமாரசாமி என்பவரது கன்ரர் வாகனம் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. வீட்டில் இந்த வாகனம் நின்றபோதே, இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக, பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (36)

# தமிழர் உரிமைக்கு ஆதரவாக...

ஐக்கிய தேசியக் கட்சியும், ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாக - சிங்கள மக்களிடையே, சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகின்ற கட்சிகளாகும்.

இதில், சிங்கள மக்களுடைய மனோநிலை, அவர்களுடைய நோக்கு என்பன - கடந்த இருபத்தைந்து வருடங்களாக வித்தியாசமான ஒரு நிலையில் சென்றிருப்பதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் - சிங்கள மக்களிடையே இருந்த தமிழரின் சுயாட்சி, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுக்கு எதிரான மனோநிலை இன்று மாறி, அவற்றை வழங்கவேண்டும் என்ற அளவிற்கு- சிங்கள மக்களின் மனோநிலை, கருத்து என்பன மாறியுள்ளன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன் எனவும் தெரிவித்த அவர், அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையையும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையையும்விட, சிங்கள மக்கள் முன்னுக்கு நிற்கின்றார்கள்.

இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் எனவும், யுத்தம் நிறுத்தப்படவேண்டும் எனவும் ஏகாபத்தியவாதிகள்கூட விரும்புகிறார்கள். இதேபோல், ஏகாதிபத்தியத்தற்கு எதிரான மக்களும், யுத்தத்தை வெறுத்து சமாதானத்தை விரும்புகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும், சமாதான முயற்சிகளின் ஊடாகத் தமது ஏகாதிபத்தியக் கொள்கையை வளர்க்க முயற்சிக்கின்றனர்.

ஆனால், இடதுசாரி கட்சிகளின் நம்பிக்கையும், நோக்கமும் வேறானது. அதாவது, 'இந்தச் சமாதான முயற்சிகளின் ஊடாக - இலங்கையில் வாழும் சகல இனமக்கள் மத்தியிலும் ஐக்கியத்தைக் கட்டி வளர்த்து - ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவதே எமது விருப்பம்.

சமாதான முயற்சிகளின் அடுத்த அம்சமாக இடைக்கால நிர்வாகம் ஒன்று தேவையென்று விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். அதாவது, இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதன்மூலம், மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடரலாம் எனப் புலிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை, இடதுசாரிக் கட்சியாகிய நாங்கள், வடக்கு - கிழக்கில் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்துவதற்கும், அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், புனர்வாழ்வு - புனரமைப்பினை மேற்கொள்வதற்கும் இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்று தேவை என்று வலியுறுத்தி வருகின்றோம்.

அத்துடன், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக அலகு ஏற்பாடு செய்கின்றபோது, அங்கு வாழ்கின்ற முஸ்லிம் மக்களுடைய உரிமைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதில், நாம் அக்கறையாக இருக்கின்றோம், எனவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

வடக்கு - கிழக்கினை பொறுத்தவரையில், ஜனநாயகச் சூழ்நிலை ஒன்றினை நிலைநாட்டுவதற்கு, இடைக்கால நிர்வாகசபை தேவை என்பதே எமது கருத்தாகும். தமிழ் மக்களுடைய விடுதலையும், தமிழ் மக்களுடைய உரிமையும் மேலும் மேலும் அபிவிருத்தியடைந்து முன்னுக்குச் செல்லக்கூடியவாறு, தமிழ் மக்களுடைய ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

எமது நாட்டின் சமாதான நடவடிக்கைகளில், அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமைப் பாத்திரத்தினை வகித்து, இந்த நாட்டில் இராணுவத் தளத்தினை அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன், அமெரிக்கா விடுத்துவரும் அறிக்கைகள், சிங்கள மக்களைத் தூண்டுவதாகவே அமைந்துவருகின்றன. எனவே, தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமாக மாற்றமடைய வேண்டும்.

யுத்தத்தின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வினை ஏற்படுத்த முனைபவர்கள், ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாகவே காணப்படுகின்றனர் எனவும் - வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



### திருமதி வேலுப்பிள்ளை ஈஸ்வரி
### (தம்பசிட்டி, பருத்தித்துறை)

தம்பசிட்டி வீதி, தம்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை ஈஸ்வரி 01.07.2003 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சேதுநாதன் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், வே.வரதராசன் (கனடா), க.கோசலா (உப தபால்அதிபர், அல்வாய்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மாசிலாமணி, காலஞ்சென்ற க.சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், மா.ராஜஸ்காந்தன் (ஆசிரியர் - ஹாட்லிக் கல்லூரி), மா.சந்திரசிறி (ஆசிரியர் - கண்டி) ஆகியோரின் சிறிய தாயாரும்,, சிவனேஸ்வரி (கனடா) இ.கருணாநிதி (காணிப்பதிவகம், பருத்தித்துறை) ஆகியோரின் மாமியாரும், க.சேதுகானனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.07.2003 பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
வே.வரதராசன் (மகன்)
க.கோசலா (மகள்)
இ.கருணாநிதி (மருமகன்)

தம்பசிட்டி
பருத்தித்துறை

(சி-1174)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.